12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 29—10—1978 | இதழ்-7



புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

(இரவு நேரம்— சென்னைத்தெருவொன்றில் அண்ணாச்சி, நொண்டி, இருவரும் மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டு நடக்கிறார்கள். அவர்கள் நடை நிதானமாக இல்லை. தள்ளாடுகிறார்கள்.)

நொண்டி: அண்ணாச்சி!... மெட்ராஸ் சரக்குன்னு அது மெட்ராஸ் சரக்குத்தான் ... பூலோகமா? சொர்க்கமான்னே தெரியலியே!...

அண்ணாச்சி: ஏன்; நம்ப சரக்கு என்ன மட்டமா? அதுவும் தான் இதப்போல ஆளைத் தலைகீழா ஆடவைக்குது!...

நொண்டி: இருந்நாலும் அண்ணாச்சி...இதுல ஒரு வேகம் இருக்கு!...நம்ப தயார் பண்ற சரக்கு நிதானமாத்தானே போதை ஏறுது!... இது கிர்ருன்னு ஆளை ஜெட் விமானத்திலே தூக்கிகிட்டுப் பறக்குதே!

அண்ணாச்சி: டே டே'... விமானத்திலே பறந்துடாதே! ... இப்ப நாம நடந்துகிட்டு இருக்கோம்...இந்த எடம் தெரியுதா? ... இதுதான் ... அண்ணா மேம்பாலம்... அதாவது ஜெமினிகிட்டே இருக்கிறோம்...

நொண்டி: ஜெமினியா? அப்படியா? ஏண்ணே உள்ளே போயி வாசனைப் பாத்துட்டு வருவோமா?.

அண்ணாச்சி: அதுசரி!... அவரு காலமாகி எவ்வளவு நாள் ஆகுது... இப்பத்தான் போயி வாசனை பாக்குறானும் வாசனை ... நம்ப வாசனையை யாராவது பாத்திடப் போறாங்க ... நட! நட!...

நொண்டி: பாத்தா என்ன ஆயிடும்? நம்பளை யார் என்ன பண்ண முடியும்கிறேன்! ஏன் இப்படி பயப்படுறே அண்ணாச்சி? நம்ப கையில்பச்சை குத்தியிருக்கிறதையே மறந்துட்டியா?

அண்ணாச்சி: ஊர் வெளியூரப்பா! எவனாச்சும் நியாயமா நடக்கிற போலீஸ்காரன் கையிலே மாட்டிகிட்டா அவன் பச்சைன்னும் பாக்க மாட்டான்; சிகப்புன்னும் பாக்கமாட்டான்!

நொண்டி: அண்ணாச்சி! நீங்க ரொம்பகோழையா இருக்கிறீங்க? இதோ இங்கப் பக்கத்திலேதான் தேனாம்பேட்டை இருக்குது! அங்க என்ன நடந்துச்சு தெரியும்லே?

அண்ணாச்சி: என்ன நடந்துச்சு?

நொண்டி: அங்கதான் நம்ப கிளை அமைப்பாளர்கள் சிலபேர் வேம்பம்பட்டை வேலம்பட்டை வேத்திருக்கும் சாராயத்தைத் தயார் பண்ணிகிட்டு இருந்தாங்க!... போலீஸ்காரங்க போனாங்க! கொடுத்தான் லெப்டிலேஒண்ணு; ரைட்டிலே ஒண்ணு!

அண்ணாச்சி: யார்போலீசா? நம்ப ஆளுங்களை அடிச்சுப்பிட்டாங்களா?

நொண்டி: சே சே! நடக்குமா அப்படி? நம்ப ஆளுங்க;புரட்சித்தலைவர் வாழ்க! பொன்மனச்செம்மல் வாழ்க! அப்படின்னு கோஷம் போட்டுகிட்டே போலீஸ்காரனுங்களுக்கு லெப்ட் ரைட் கொடுத்து ஒரு அதிகாரியைக்கட்டி வச்சு கத்தியால குத்தி — புனித ராஜ்யத்தின் பெருமையை நிலைநாட்டியிருக்காங்க.

அண்ணாச்சி: போலீஸ்கிட்ட தடிக்கம்பு, கண்ணீர்ப் புகை துப்பாக்கி எதுவும் இல்லியா?

நொண்டி: எல்லாம்இருக்கு! அதெல்லாம் எதுக்குப் பயன்படுத்துறது? எவனாவது கறுப்புக்கொடி பிடிச்சா — இல்லை; வேலை நிறுத்தம் அர்த்தால் பண்ணுனா அப்பத்தானே பயன்படுத்தணும்னு உத்திரவு!

அண்ணாச்சி: ஓ! நான் அதை மறந்துட்டுஎவனோ மடையன் மாதிரி கேள்வி கேட்கிறேன், நடக்கிறது நம்ப ராஜ்யம்கிறதை மறந்துட்டேன் .. நீ சொன்ன மாதிரி மெட்ராஸ் சரக்கு ஆளைச் சுழட்டத்தான் செய்யுது!

நொண்டி: ஏண்ணே —இந்தப்பாலத்துக்கிட்டதானே நம்ப புரட்சித் தலைவர் பெரியார் சிலை வைக்க பீடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நடத்தினரு!...

அண்ணாச்சி: அமா! ஆமாம் உனக்கு நல்லா ஞாபகம் இருக்கே. அதோ அந்த மூலையிலே பெரியார் சிலை கூட இருக்கே...

காட்சி 12

நொண்டி: வாண்ணே! போயி அந்த சிலையோட முகத்தைப் பார்த்துட்டு வருவோம்.

அண்ணாச்சி: முகத்தைக் கீழே நின்னு பாக்க முடியாது! பாலத்து மேலே ஏறித்தான் பாக்க முடியும். இப்ப நம்மால அவ்வளவு உயரம் ஏறமுடியாதுப்பா!...

நொண்டி; ஆமாம்— இந்தப் பொடியன் மசால் வடையும் பேப்பரும் வாங்கிட்டு வர்ரேன்னு போனான் — இன்னம் ஆளையே காணுமே! எவனாவது போலீஸ் காரனு கிட்டே மாட்டிக்கிட்டானு?...

பொடியன்: (வந்து கொண்டே) நானுமாட்டுவேன்?... இதோ பேப்பர்! இதோ மசால் வடை!...

(அண்ணாச்சியும் நொண்டியும் மசால் வடையை வாங்கித் தின்று கொண்டே)

அண்ணாச்சி: பொடியா இன்னைக்குப் பேப்பர்ல என்ன விஷேம்டா... நீயே சொல்லு! இந்த வெளிச்சத்திலே படிக்க முடியாது!....

பொடியன்: நம்ப அரசாங்கம் விபச்சாரத்தை ஒழிக்கிறதா தீவிரமா முடிவு பண்ணிட்டுதாம்!

நொண்டி: அப்படின்னு எப்படி?

பொடியன்: புதுசா ஒரு சட்டம் வரப்போகுது! இனிமேல் ஆண்கள் விபச்சாரம் செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். பெண்கள் விபச்சாரம் செய்தால் முதல் குற்றத்துக்குமன்னிப்பு!இரண்டாவது குற்றத்துக்கு அபராதம்! மூன்றுவது குற்றத்துக்குத்தான் ஜெயில் தண்டனை! ஆனா ஆண்கள் விபச்சாரம் செய்தால் முதல் குற்றத்துக்கே ஜெயில் தண்டனை உண்டு!

நொண்டி: ஆண்கள் விபச்சாரம்னு என்ன' அதாவது ஆண்கள்,பெண்களு கிட்ட பணம் வாங்கிகிட்டுத் தங்கள் கற்பை வியாபாரம் செய்வாங்களா?...

பொடியன்: என்னு மண்ணுங் கட்டியோ? அப்படி சட்டம் வரப்போவு

(தொடர்ச்சி 12ம்-பக்கம்)

உறுதிமொழியல்ல; இறுதி எச்சரிக்கை!

காலஞ்சென்ற சோஷலிஸ்டுத் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியாவைப்பற்றி காந்தியார் கருத்தறிவிக்கையில் 'எல்லோருக்கும் தலையில் மட்டும்தான் மூளை இருக்கும்; டாக்டர் லோகியாவுக்கு உடம்பெல்லாம் மூளை என்று கூறினர்.

டாக்டர் லோகியாவின் அறிவு, ஆற்றல், வாதத் திறமை ஆகியவை, மகாத்மா காந்தியை அவவாறு கூறச் செய்தன. காந்தியின் கணிப்பும் தவறானதல்ல: லோகியாவின் மதிப்பும் குறைவானதல்ல.

அதேபோல இப்போது சிலர் தங்களை மிகப் பெரிய மேதைகளாகக் கருதிக் கொண்டு எழுதியும் பேசியும் வருகிறார்கள். லோகியாவைப் போலவே தங்களுக்கும் உடம்பெல்லாம் மூளை இருப்பதாக அவர்களுக்கு நினைப்பு!

தங்களை 'சர்வ கலா வல்லுநர்'களாக எண்ணிக் கொண்டு எதைப் பற்றியும் பேச, எழுத முந்திரிக் கொட்டைபோல் முந்திக்கொண்டு முனைந்து விடுகிறார்கள்; தங்களுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை என்பது அவர்களின் முடிவு.

அப்படிப்பட்ட அதிமேதாவி'கள், நாட்டு மக்களையெல்லாம் ஏதும் தெரியாத 'அப்பாவி'களாகக் கணக்குப் போட்டுக் கொண்டு பிதற்றி வருவதையும் பார்க்கிறோம்.

மனநோய் மருத்துவமனையில் இருக்க வேண்டியவர்களும், மாமேதைகளாக' விளம்பரம் பெற்று விடும் விநோதத்தை நமது நாட்டிலேதான் காண முடியும்

நாடகத்திலே கோமாளி வேடத்துக்குக் கூடத் தகுதியில்லாத ஒரு நடிகர் நாடாள வந்து கோமாளித்தனமான அரசியல் நடத்தி வரும் அதிசயத்தையும் இங்கேதானே காண முடிகிறது!'

இப்படிப்பட்ட அதிசயப் பிறவிகள் பட்டியலைச் சேர்ந்த ஒருவர்தான் நடிகர் 'சோ' என்னும் வக்கீல் இராமசாமி. வக்கீல் தொழிலை ஒழுங்காகச் செய்ய வக்கின்றி, நடிப்புத் துறைக்கு மாறிய அந்த மனிதர்' பத்திரிகைத் துறையிலும் புகுந்து, தனது 'அதிமேதா விலாச'த்தைப் பறைசாற்றிக்கொண்டு, மூதறிஞர் இராஜாஜியும், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், சர் சி. பி. இராமசாமி ஐயரும் இல்லாத குறையைத் தாம் ஒருவரே நிறைவு செய்து கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்ள முனைந்திருக்கிறார்.

தமது அரைவேக்காட்டுத் தனத்தை அரசியலில் வெளிப்படுத்திக் கொள்ள அவர் தவறுவதில்லை. அரசியலில் எது நடந்தாலும் உடனே இவருடைய 'அபிப்பிரா'யத்தைக் கேட்க நாடே எதிர்பார்த்திருப்பதைப்போல கருத்தறிவிக்கக் கிளம்பி விடுவது இவரது வாடிக்கையாகி விட்டது!

இவருடைய கிறுக்குத்தனமான எழுத்தும் பேச்சும் தப்பித்தவறி கூடத் தமிழின மக்களுக்குச் சாதகமாக அமைவதில்லை. தமிழ், தமிழர் தமிழ்ப் பண்பாடு என்பதெல்லாம் அவருக்கு விளக்கெண்ணெய் குடிப்பதுபோல! தமிழர்களுக்கு எதிரான கருத்து அறிவிப்பதென்றால் 'அக்கார வடிசல்' சாப்பிடுவது போல! ஏனென்றால் அவர் அவ்வளவு பெரிய—பரந்த, மனப்பான்மை கொண்டவர்!

தாம் எழுதுவதையும், பேசுவதையும்இந்த நாட்டு மக்கள் ஏற்க மறுக்கிறார்களே என்பது தான் அவரது கவலை. அவர் பேச்சைக் கேட்டிருந்தால் எப்பொழுதோ, இரஷ்யாபோலவோ அமெரிக்கா போலவோ நமது நாடும் முன்னேறியிருக்கும்!

1971 தேர்தலின்போது, தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சியை ஒழித்துக்கட்டி 'ய மறு வேலை பார்ப்பேன்' என்று சபதமேற்று வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்தார் இந்தத் துக்ளக்! இந்தியத் தலைநகரான டெல்லியிலே கூட தனக்காக ஒரு தேர்தல்பிரசாரப்பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யச்சொல்லி அங்கேயும் போய் தமது அரிய கருத்துக்களை' வழங்கி விட்டு வந்தார்.

கேட்டார்களா மக்கள்! அவர் யார் யாரை ஆதரித்தாரோ அவர்களெல்லாம் மண்ணைக் கவ்வி. அவருடைய எதிரிகளே வெற்றி பெற்றார்கள்!

தேர்தல் என்று வந்துவிட்டால் இவர் 'அபிப்பிராயம்' தெரிவிக்கத் தவறுவதில்லை. ஆனால் அதனைக் காதில் போட்டுக்கொள்ளத் தான் யாரும் தயாராக இருப்பதில்லை!

இவ்வளவு பெரிய மேதையை இந்த நாட்டிலேயே வைத்துக்கொண்டிருப்பதும் தவறு. அவருடைய சிறந்த அறிவும் முற்போக்கான கருத்துக்களும் மற்ற நாடுகளுக்கும் பயன்பட வேண்டும். எனவே, அவர் மாதம் ஒரு முறையாவது வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு தனதுஅறிவுரைகளைத்தெளித்து விட்டு வந்தால் உலகம் உய்ய வழி பிறக்கும். ஆனால் இத்தனை நாளாக அவரும் ஏதேதோ எழுதியும் பேசியும் பார்க்கிறார். அவரை உலகம் புரிந்து கொள்ள வில்லையே! எந்த வெளி நாட்டாரும் அவரை அழைக்கவில்லையே!

பாவம், தமிழ் நாட்டில் அவர் பிறந்தது தான் துரதிருஷ்டமாகிவிட்டது! வெளிநாட்டில் மட்டும் அவர் பிறந்திருப்பாரானல், அவரது புகழ் உலகளாவியதாக அமைந்திருக்காதா?

திருவாளர் துக்ளக் சோ, அண்மையில் காரைக்குடியில் நடந்த கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட ஜனதா கட்சி மாநாட்டில் பேசிய பேச்சு இருக்கிறதே, அதை யாராவது சட்டை பண்ணினார்களா?

இந்தியைப் பற்றி அவர் தெரிவித்துள்ள கருத்தை உள்ளபடியே வேறு எவராலும் துணிந்து வெளியிட்டிருக்க முடியாதுதான்!

இந்தியைத் திணிக்கக் கொஞ்சம் தயங்கிக் கொண்டிருக்கும் மத்திய அரசுக்கு 'அஞ்சேல் யாமிருக்க பயமேன்?' என்று கூறுவதுபோல் அல்லவா அவரது பேச்சு அமைந்திருக்கிறது! இதுவரை இந்தியை எதிர்த்து வருபவர்களைப் பார்த்து ஒரு கேள்விக் குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் பாருங்கள். இந்தத்துணிவு வேறு யாருக்கு வரும்?

'தமிழ்நாட்டு மக்களுக்கு எம். ஜி. ஆரும், கருணாநிதியும் உறுதி மொழி தரட்டும்; தமிழ், ஆங்கிலம் படிக்கும் எல்லோருக்கும் வேலை கொடுக்கிறோம் என்றுசொல்லட்டும்; இந்தி படிக்காமல் இருப்போம்.''

இப்படிக் கேட்டிருக்கிறார் எப்படி இருக்கிறது வாதம்?

தமிழும் ஆங்கிலமும் மட்டும் படித்தால் அனைவருக்கும் வேலை கொடுப்போம் என்று தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆரும் எதிர்க்கட்சித் தலைவரான கலைஞரும் உறுதிமொழி தரவேண்டுமாம்!



அப்படியானல் 'இந்தி படிப்பவர்கள் அனைவருக்கும் கட்டாயம் வேலை கொடுக்கிறோம்' என்று, தலைமையமைச்சர் மொரார்ஜிதேசாயிடம் உறுதிமொழி பெற்றுத்தர இந்தத் துக்ளக் தயாரா? இந்தக் கேள்வியைத் தமிழர்கள் கேட்க மாட்டார்கள் என்ற நினைப்பில் பேசுகிறாரா?

'ஆங்கிலம் அந்நிய மொழி; அது படித்தால் தப்பு இல்லையா? இந்தி படித்தால் என்ன தவறு?' என்று கேட்கிறார்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக, இந்திக்கு வக்காலத்து வாங்குபவர்கள் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன கேள்விதான் இது!

ஆங்கிலம் தமிழர்கட்கு அந்நிய மொழி என்றால் இந்தி மட்டும் என்னவாம்? தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு ஆங்கிலம் எப்படி அந்நிய மொழியோ அப்படித்தான் இந்தியும்!

ஆங்கிலமாவது இருநூறு ஆண்டுகளாகத் தமிழர்களிடையே புழக்கத்தில் இருந்துவரும் மொழி. இந்தி அப்படி கூட அல்ல. முழுக்க முழுக்க அந்நிய மொழிதான்.

ஆங்கிலம் அறிந்திருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை அளவிற்குக்கூடத் தமிழ்நாட்டில் இந்தி படித்தவர்கள் கிடையாது.

ஆங்கிலம் உலகப் பொது மொழி; அறிவியல் மொழி; அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும் மொழி; இந்தி ஆங்கிலத்துக்கு ஈடாகுமா?

இந்தி படித்தால் பல மாநிலங்களில் வேலை கிடைக்குமாம்; ஆனல் இந்தியை எதிர்ப்பவர்கள் தங்கள் பிள்ளைகள் உருப்படட்டும் என்று நினைக்கவில்லையாம். தாசமாகப் போகட்டும் என்று நினைக்கிறார்களாம்.

மாமேதை 'சோ' பெருமகனாரின் திருவாசகங்கள்தாம் இவை!

இந்தி எதிர்ப்பாளர்களின் பிள்ளைகள் 'நாசமாக'ப் போகக் கூடாது; 'உருப்பட' வேண்டும் என்று சோவுக்குத்தான் எத்தனை கவலை! ஆடு நனைகிறதே என்றுஇந்தஓநாய்அழுகிறது! எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

'இந்தி படித்தால் பல மாநிலங்களில் வேலை கிடைக்கும்' என்று கூறுகிறார்: அதற்கு என்ன உத்தரவாதம்?

இந்தி படிக்காதவர்களுக்கு வேலை கொடுப்பதாக கலைஞரும் எம். ஜி. ஆரும் உறுதிமொழி தரவேண்டும் என்று கேட்பவர், இந்தி படித்தால் வேலைதர யாருடைய உறுதிமொழியை வாங்கித் தரப் போகிறார்?

இந்தி படித்தால் பல மாநிலங்களில் வேலை கிடைக்கும் என்றால், அந்த இந்தியைப் படிக்காமலே, தாய் மொழியுடன் ஆங்கிலம் மட்டும் படித்தவர்கள் இன்றைக்கு அமெரிக்காபோன்றவெளிநாடுகளில் டாக்டர்களாகவும் எஞ்சினியர்களாகவும்வேலைபெற்றுஆயிரக் கணக்கில் அங்கேயே குடியேறிவாழ்கிறார்களே இது எப்படி முடிகிறது?

பல மாநிலங்களில் வேலை கிடைப்பதை விட பல வெளிநாடுகளில் வேலை கிடைப்பது நல்லதல்லவா?

''வேலைக்காகத்தானே படிக்கிறோம்? அதே மாதிரி இந்தியைப் படித்தால் என்ன தப்பு?'' என்று கேட்கிறார்!

'சோவும், 'சோ'வின் குடும்பத்தாரும் வேலைக்காகத்தான் படித்திருக்கிறார்கள். அவர்கள் வேலைக்காக இந்தியைப் படித்துக் கொள்ளட்டும். நமக்கு அதில் ஒன்றும் காழ்ப்புணர்ச்சி இல்லை மற்றவர்களைப் பார்த்து ஏன் இந்தி படிக்கவில்லை என்று கேட்க அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

இந்தியைத் தமிழினம் எதிர்ப்பது வயிற்றுப் பிழைப்புப் பிரச்சினைக்காக அல்ல; இது ஒரு மானப் பிரச்சினை, தமிழரின் தன்மானத்துக்குச் சவால் விடும் பிரச்சினை!

"மானத்தைப்பற்றிக் கவலை இல்லை; எங்களை இந்தியாவின் இரண்டாந்தரக் குடி மக்களாக ஆக்கிக்கொள்ளவும்தயாராயிருக்கிறோம்; வேலைதான் எங்களுக்கு முக்கியம்; வயிற்றுப் பிழைப்புதான் எங்கள் இலட்சியம்' என்று சொல்லிக்கொள்பவர்கள் தாராளமாக இந்தியைப் படிக்கட்டும். தன்மானமுள்ள கடைசித் தமிழன் இருக்கும்வரை எத்தனை துக்ளக்குகள் இந்தித் திணிப்புக்குத் துணையாக நின்றாலும் இந்தி இந்த நாட்டிலே ஆட்சிமொழியாக—ஆதிக்க மொழியாக நுழைந்து விட முடியாது என்பதை மட்டும்'சோ'கூட்டத்தார் உணர்ந்து கொள்ள வேண்டும்.

'தமிழ் மக்கள் அரசியல் சூதாட்டத்திற்குப் பலியாகி விடாமல் இந்தியைப் படிக்க வேண்டும்' என்று வேண்டுகோள் விடுக்கும் சோவுக்கு நாம் தெரிவித்துக் கொள்கிறோம்:

தமிழர் நலத்தில் சோவுக்கு இருக்கும் அக்கறையை விட தமிழினக் காவலரான கலைஞர் அவர்களுக்கும், கழகத்திற்கும் அதிகம் உண்டு

தலைவர் கலைஞரும் இதைத்தான் சொல்கிறார், தமிழர்களைப் பார்த்து.

''அரசியல் சூதாட்டத்திற்குப்பலியாகி விடாமல் தமிழையும் ஆங்கிலத்தையும் மட்டும் படியுங்கள்; ஆதிக்க மொழியான இந்திக்கு இடம்கொடுத்து விடாதீர்கள்'' என்று'

வருகிற டிசம்பரில் திருச்சியில் கூட இருக்கும் இந்தி எதிர்ப்பு மாநாடு, இந்தித் திணிப்பாளர்களின் முயற்சிக்குச் சாவுமணி அடிக்கப் போவது உறுதி, உறுதி என்பதை மட்டும் இந்த நேரத்தில் 'சோ'க்களுக்குச் சொல்லி வைப்போம்.

சோ கேட்கும் உறுதி மொழியையல்ல; இந்தி ஏகாதிபத்தியத்துக்கு இறுதி எச்சரிக்கையையே தர இருக்கிறது அந்த மாநாடு!

"விநாசகாலே விபரீத புத்தி!"

"விநாசகாலே விபரீத புத்தி' இந்தப்பழமொழியைச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நேரத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரியவர் ஜெ. பி. நினைவு கூர்ந்தார்; நினைவுப்படுத்தினார்.

1975 ஜுன் 25 ஆம் நாள் நள்ளிரவில் உள் நாட்டு அவசர நிலைப் பிரகடனம் செய்து விட்டு; அதே பின்னிரவில் தேசிய தலைவர்களைக் கைது செய்தது இந்திரா அரசு. பெரியவர் ஜெ. பி. யைக் கைது செய்த போது அவருடைய வெந்த உள்ளத்திலிருந்து வெளி வந்தது அந்தப் பழமொழி. அதன் விளைவு என்ன என்பது அண்மைக் கால வரலாற்று நிகழ்ச்சி அதே பழமொழி இன்று நமது கொதித்துக் கொண்டிருக்கும் உள்ளத்திலிருந்து துடித்து வெளி வருகிறது

23—10—78 அன்று முழுக் கடை அடைப்பு, வேலை நிறுத்தம் என்று எதிர்க் கட்சிகள் அறிவித்தன. அறிவிப்புச் செய்தபோதே அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி நல்லிணக்க முடிவு காணும்வாயில்கள் திறந்தே இருக்கின்றன. என்பதையும் தெரிவித்தன எதிர்க் கட்சிகள். ஆனால் முதலமைச்சர் இராமச்சந்திரனே ஆணவத்தின் முகட்டிலேறி அகம்பாவமாக அறை கூவல் விடுத்தார். கூடிப் பேசி முடிவு காண மறுத்தார். எனவே வேலை நிறுத்தம் கதவடைப்பு நடந்து தீர வேண்டிய கட்டாயத்தை முதலமைச்சரே உருவாக்கினார்.

ஆனால் அதே நேரத்தில் அவர் போராட்டத்தை முறியடிப்பதற்கான எல்லா சட்டப்புறம்பான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற அரசிடம் காவல் துறை இருக்கிறது; அது போதவில்லை என்றால் அண்டைமாநிலக் காவல் துறையின் உதவியைக் கோரிப் பெற முடியும்; அதுவும் போதா விட்டால் மத்திய காவல்துறை உதவிபெறலாம் இவையெல்லாம் போதா விட்டால் இருக்கவே இருக்கிறது; இராணுவம். அதுவும் அவருக்கு மிகவும் வேண்டிய மத்திய அரசிடமே இருக்கிறது, ஆனால் முதலமைச்சர் இராமச்சந்திரனோ இவற்றில் எதையும் நம்பவில்லை.

தன்கட்சிக் குண்டர்களையே நம்பினார். அவசர அவசரமாக நாடெங்கணுமிருந்து ஆளும் கட்சி அமைப்பாளர்கள் தந்தி கொடுத்துத் தருவிக்கப்பட்டார்கள். தருவிக்கப்பட்டவர்களிடம் ஒரே மாதிரியான செயல்முறை வகுத்தளிக்கப் பட்டது. அவர்கள் தத்தம் ஊர்களுக்கு உடனே திரும்பிச் சென்றார்கள். சென்றவர்கள் எல்லாப் பகுதிகளிலுமிருந்த குண்டர்களைத் திரட்டினார்கள்

22—ஆம் தேதியே எல்லா ஊர்களிலும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்திக்காட்டினார்கள். கடைகளைத் திறக்கா விட்டால் கடும் விளைவுகளுக்கு ஆளாக நேரிடும் என்றுகடைக்காரர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்கள். மறுநாள் காலை காவலர்களின் உதவியோடு ஆளும் கட்சிக் குண்டர்கள் கடைகளைத் திறக்கும்படி கட்டாயப்படுத்தினார்கள்; அச்சுறுத்தினார்கள். அவர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு கடைத் தெருவில் ஊர்வலமாகச் சென்றார்கள். அவர்கள் ஊர்வலமாகச் செல்வதைத் தடுக்க வேண்டிய காவல்துறையினர் அவர்களுக்குப்பாதுகாப்பாகச் சென்றனர். அவர்கள் அடையாளம் காட்டுகிற எதிர்க் கட்சியினர் உடனுக்குடன் கைது செய்யப்பட்டனர். முதல் நாளே எல்லாப் பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கில் எதிர்க் கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

23—ஆம்தேதி எதிர்க்கட்சியினர் கூட்டமாகச் சென்று வணிகப் பெருமக்களை கடை அடைக்கச் சொல்லிக் கேட்டுக் கொள்ளாது தடுக்கப்பட்டனர். மீறிச்செல்ல முயன்றவர்கள் கைது செய்யப்பட்டனர். தடியடிக்கு ஆளாயினர். சில இடங்களில்கண்ணீர்ப் புகைக் குண்டிற்கும்துப்பாக்கிக்குண்டுகளுக்கும் ஆளாயினர். ஆளும் கட்சியினர் கூட்டமாகச் செல்லக் காவல்துறையே பாதுகாப்பு அளித்தது.

காவல்துறையினரின் கண்ணுக்கெதிரிலேயே ஆளும் கட்சி 'ரவுடி'கள் வன்முறை வெறியாட்டங்களில் வரம்பின்றி ஈடுபட்டனர். வணிகர்கள் வீடுகட்குச் சென்று இழுத்து வரப்பட்டு, கடைகளைத் திறக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். காவல்துறை அதிகாரிகளின் பெயரிலேயே ஆளும் கட்சிக் குண்டர்கள் அரசு ஊர்திகளில் சென்றே விட்டிலிருந்த வணிகர்களை இழுத்து வந்தனர்.

போராட்ட நாளுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்பிருந்தே அரசு அதிகாரிகள் ஜீப்களிலும் வேன்களிலும் ஒலிபெருக்கிகளைக் கட்டிக் கொண்டு அறிவிப்புச் செய்து கொண்டிருந்தார்கள்.

"அராஜகக் கும்பல் — சமூக விரோதச் சக்திகள் — காலிக் கூட்டம் கடைகளை அடைக்கச் சொல்லும் வியாரிகளே அதைச் செவி மடுக்காதீர்கள். கதவுகளைத் திறவுங்கள். முழுப் பாதுகாப்புக் கொடுக்கப்படும்'' என்று அறிவித்தவர்கள் அரசு அதிகாரிகள், அறிவிப்புக்கு அவர்கள் பயன்படுத்திய வாசகங்களோ அ. தி. மு. க. வாசகங்கள்.

இன்னும் வேதனை என்னவெனில் பல இடங்களில் அரசு வாகனங்களில் அரசு அதிகாரிகள் பக்கத்தில் அமர்ந்திருக்க அந்த அறிவிப்புகளை ஆளும் கட்சி குண்டர்களே செய்தனர்.

முதலமைச்சர் இராமச்சந்திரன் போராட்டத்தை முறியடிக்கக் கடைபிடித்த முறைகள் இதுவரை இந்த நாட்டில் எந்த முதலமைச்ரும் கடைபிடிக்காத முறைகள். கடைந்தெடுத்த 'இட்லரிச முறைகள்' ஆளும் கட்சிக் குண்டர்கள் நடத்திக் காட்டிய வன்முறை வெறியாட்டங்கள் நாடெங்கணும் ஒரே மாதிரியானவை. முன்கூட்டி முறைப்படுத்தப்பட்டால் பதவி அதுவும் தலைமையால் முறைப் படுத்தப் பட்டால் தவிர இப்படி ஒருபோதும் நிகழாது. அரசு நிர்வாக இயந்திரத்தை ஒதுக்கிவிட்டு கட்சிக் குண்டர்களைப் பயன்படுத்துவது ஆபத்தானது. வன்முறை வெறியாட்டத்தின் உச்சக்கட்டத்திற்கே ஆளும் கட்சி ரவுடிகள் சென்றிருக்கிறார்கள். சென்னையில் தமிழினத் தலைவர் கலைஞரின் வீட்டில் கற்களை வீசி இருக்கின்றனர். சோடா பாட்டில்களை வீசி எறிந்திருக்கின்றனர். சன்னல் கண்ணாடிகளை நொறுக்கி இருக்கின்றனர். வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்களை நொறுக்கி நாடாளுமன்ற உறுப்பினர் மாறனின் மகனைத் தாக்கியிருக்கின்றனர். நாற்றம் எடுத்த வாயிலிருந்து நரகலை உமிழ்ந்திருக்கின்றனர் கோஷம் என்ற பேரில் அத்தனைப் பேயாட்டங்களையும் காவல் துறையினரின் கண்ணெதிரிலேயே நடத்தியிருக்கின்றனர். காவல்துறையினரோ கையை கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்திருக்கின்றனர்.

தமிழகம் இதுவரை எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்திருக்கிறது. 1965 மொழிப் புரட்சியையே சந்தித்திருக்கிறது. ஆனால் இப்படி ஒரு எதிர்க்கட்சித் தலைவரின் வீடு தாக்குதலுக்கு உள்ளான நிகழ்ச்சி நடந்தே இல்லை இதுதான் முதலமைச்சர் இராமச்சந்திரன் நடத்தும் அரசியல் புரட்சியோ என்னவோ!

மன்னார்குடியில் துப்பாக்கிச்சூடு—முப்பது ரவுண்டுகள் சுட்டிருக்கின்றனர். முன்னாள் அமைச்சர் மன்னை நாராயணசாமி உட்பட எதிர்க்கட்சியினரைக் கைது செய்து அவர்கள்மீது கொலைக் குற்ற வழக்குத் தொடுத்திருக்கின்றனர். அங்கு அராஜகத்தில் ஈடுபட்ட ஆளுங் கட்சிக் குண்டர்களுக்குக் காவல்துறை பாதுகாப்பாக இருந்திருக்கிறது.

முதலமைச்சருக்கு ஒன்றை நினைவுபடுத்த வேண்டும் — மன்னிக்க வேண்டும் தெரிந்து மறந்திருந்தால்தானே நினைவு படுத்த வேண்டும். அவருக்குத் தெரிந்திருக்கவே நியாயமில்லை. எனவே அவருக்குத் தெரிவிக்க வேண்டும். இட்லர் தனிப் படையே வைத்திருந்தான். புயல்படையேவைத்திருந்தான். ஆனால்அவன்முடிவு என்னவாயிற்று? இதனை முதலமைச்சர் இராமச்சந்திரன் எண்ணிப் பார்க்க வேண்டும்

எம். ஜி இராமச்சந்திரன் குமுறும் எரிமலையின் முகட்டிலே நின்று கொண்டு 'டூயட்' பாடிக் கொண்டிருக்கிறார். தீயுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார். தி. மு. கழகத்துடன் விளையாடுகிறார். கேடு வரும் பின்னே மதி கெட்டு விடும் முன்னே. விநாசகாலே விபரீத புத்தி. இது ஏதோ இயலாத எளியவர்கள் விடுகிற சாபமில்லை. எதையும் சாதிக்கும் ஆற்றல் மிகு கழகச் செயல் மறவர்கள் விடுக்கும் எச்சரிக்கை! அதுவும் இறுதி எச்சரிக்கை!

எல். கணேசன், பி.ஏ., பி.எல்.,
வெளியீட்டுச் செயலாளர்

அங்கும்-இங்கும்!

சாதி, மத, சனாதன மவுடீகங்களில் நம்பிக்கையற்ற சோவியத்நாடு 'சுக்கிர' கிரகத்திற்கு இருசெயற்கைக் கோள்களை அனுப்பி அக்கிரகத்தை ஆராய்ச்சி செய்கின்றது. நாமோ 'சுக்கிரன்' வடக்கே செல்கின்றானா அல்லது தெற்கே செல்கின்றானா என்பது குறித்து ஆராய்கின்றோம் வீணாக சாதி, மத, சனாதன மவுடீகங்களைப் பின்பற்றி முன்னேறாமல் பின்னோக்கியே சென்று கொண்டு இருக்கின்றோம். சாதிக் கலவரங்கள் செய்வதில்தான் ஆண்டு தோறும் நாம் முன்னேறுகின்றோம்.

சென்ற ஆண்டு முதல் மூன்று மாதத்தில் நடைபெற்ற சாதிக் கலவரங்களை விட இவ்வாண்டு அதிகமாக நடைபெற்றுள்ளன. சென்ற ஆண்டு 36 சாதிக் கலவரங்கள் நடைபெற்றன. ஆனால் இவ்வாண்டு முதல் மூன்று மாதங்களில் 43 சாதிக் கலவரங்கள் நடைபெற்று உள்ளன. உத்தரபிரதேசத்தில் 11 கலவரங்களும், பீகார் மாநிலத்தில் 9 கலவரங்களும், மே. வங்கத்தில் 7 கலவரங்களும், குஜராத் மாநிலத்தில் 6 கலவரங்களும், கேரளாவில் மூன்றும், கர்நாடகத்தில் இரண்டும், ஆந்திரா, அசாம், மணிப்பூர், தமிழ்நாடு, திரிபுரா ஆகியவற்றில் தலா ஒன்றும் ஆக 43 கலவரங்கள் நடைபெற்றன என்று இந்திய போலீஸ் ஐ ஜிக்கள் மாநாட்டில் மத்திய கண்காணிப்புத்துறை தாக்கல் செய்த அறிக்கை கூறுகின்றது.

—வே. பால்ராசு
காரைக்குடி.

மதிப்புரை:

உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்!

சரித்திரத்தின் பொன்னேட்டில் நிறைந்திருக்கும்
சாதனைகள் செய்தவர் யார்? இந்த நாட்டின்
சரித்திரத்து நினைவுகளைக் கண்முன் காட்டச்
செய்ததும் யாரிங்கே?

எனக்கேள்வி கணைகளைத்தொடுத்து 'சாதனைத்தலைவன் சரித்திர நாயகன்' எனும் கவிதையில் நாலரைக்கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் தமிழினத் தலைவர் கலைஞரின் ஆட்சித்திறனை எடுத்துக்காட்டுகிறார் கவிஞர் மணிமொழி. அன்புத் தலைவரின் அரசியல் வாழ்க்கை பள்ளிப்பருவத்திலேயே தொடக்கமானதை,

'ஓடிவந்த இந்திப் பெண்ணே - கேள்நீ
தேடிவந்த கோழை யுள்ள
நாடி தல்லவே...' எனப்
பிறைக் கொம்பு ஊதி
அரும்பு சங்கொலித்து விற்புலி கயல்
பொறித்த விழல் வேந்தர்
கொடியெடுத்து வீதிவலம் வந்தேநீ
முரசொலித்தாய்!

என இந்தியை எதிர்த்து முரசொலித்ததை நினைவுகூர்ந்து, அவர் நடந்து வந்த பாதையிலே சந்தித்த இன்னல்களைப் படம் பிடித்துக் காட்டி, நெருக்கடி காலத்தில் கழகத்தைக் கட்டிக் காப்பதில் தாயாக விளங்கியதை,

'தாயாகிச் சேய்க்கழகம் காத்தாயே
சேய்க்கழகம் காப்பதற்குச் சோதனைகள்
சந்தித்தாயே'

எனக் கூறும் வரிகள் நமது நெஞ்சைத்தொடுகின்றன.

'தாயின் இதயம்' எனும் கவிதை நெஞ்சை அள்ளும் உருவகக் கதை—கதையா அது? . இல்லை...இல்லை!

தலையெடுக்க வைத்தவனான் தலையெடுப்பேன்எனச் சொன்ன தறுதலைக்கு—அந்தத் தாயின் இதயம் பெற்ற தலைவன் சொன்ன வரிகளை நினைவு படுத்தி நமது நெஞ்சை உருக வைக்கிறார் கவிஞர். இதோ அந்த வரிகள்.

'தலைகேட்கிறாய் தம்பி—நம் இனத்திற்கே
உலைவைக்கும் பகைவனவன்
காலடியில் வைப்பதற்கா கேட்கின்றாய்?
வேண்டாமடா உன்றன்
நிலைஉயர்த்த தேவையான
விலைகிடைக்கு மெனில்
தருகின்றேன்—தடையில்லை'

பாசத் தாயின் இதயம்பெற்றஅந்த 'இதயத்தலைவனை'
சாகசத்தலைவா - நீ புதுயுகத்தின்
சந்திரமதியோ எனச்
சந்தேகம் எழுகிறது! — எங்கள்
இதயம் கவர் தலைவா—உன்னை நிறம்மாறும்
இதழ்களால் அல்ல; என்
இதயத்தால் வாழ்த்துகிறேன்'

எனக் கவிஞர் மணிமொழி வாழ்த்தும்போது, படிப்போரின் இதயமும் வாழ்த்தாமல் போகுமா?

'சிரிப்பு முகம் காட்டும்
சிங்காரத் தலைவாநீ
சோதனையாம்
நெருப்பில் போட்டெடுத்த
நிகர்ப் பொன்னாய் ஒளிர்கின்றாய்!

எனும் மணிமொழியாலே 'தலைதாழா மலைத்தமிழனின்' நெஞ்சுரத்தை வியக்கின்றார் கவிஞர்.

நாடறிந்த 'சிறைப்பறவையாம்' கலைஞரை
'பூஇருக்கும் செடி கொடிகள்
பெருமையினைப் பெறுவதுபோல்
நீயிருக்கும் சிறைச்சாலை
நீடுபுகழ் பெற்றதிங்கே!

எனும் வரிகளால் போற்றும்போது கலைஞரின் கவிநயம் புலப்படுகிறது.

"மங்காத புகழ்த் தலைவா உன்
சிங்காரச் செயல்களெண்ணிச்
சங்கீத மொழிச் சொல்லால்
சனக்கடலில் ஒருதுளி நான்
சரக்கவியால் வாழ்த்துகிறேன்!
ஊனோடு உணர்வோடு உறைந்த
உயிர்த்தமிழில் — நான்
உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்'

கலைஞரின் புகழ்பாடும் கவிஞர் மணிமொழி மரபுக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர் என்றாலும், இந்த நூலில் முதல் பாடலை மட்டும் எண்சீர் விருத்தத்தில் எழுதி, மற்றப் பாடல்களை எல்லாம் உரைநடைக் கவிதைகளாகவே அமைத்துள்ளார். எனினும் உணர்ச்சிக் கவிதைகளாக—படிப்போரின் உள்ளம் கவரும் உயிர்க் கவிதைகளாகத் திகழ்கின்றன.

இறுதியாக ஒருவேண்டுகோள்!
கவிஞரே விடுக்கின்றார் கலைஞருக்கு!
"வாழ்ந்த போது வாழ்த்துப்பாடி
வாழ்விழந்த போது வசைகளைப்பாடி
மீண்டுமொரு
வசந்தம் வருமே, அப்போது
மாலையோடு வரும் துரோகிகளை
அடையாளம் கண்டு விடு:
அப்போது மட்டும் நீ கொஞ்சம்
கண்டிப்பானவனாய் இருந்துவிடு!
ஏனென்றால் — இந்த
நகல்களால்
அசல்கள் அழிந்து விடக்கூடாது!
இந்தப் போலிகளால்
உண்மைகளின் உளம் நொறுங்கிவிடக்கூடாது!"

நமதுவேண்டுகோளும் அதுவே!

கிடைக்குமிடம்
கலை பப்ளிகேஷன்ஸ்
17-9, பீட்டர்ஸ் காலனி,
இராயப்பேட்டை, சென்னை-14,
விலை ரூ. 2.

★

அண்ணா கோவை

தாழ்ந்த தமிழினத்தைத் தலைநிமிரச் செய்த பகுத்தறிவுத்தந்தை பெரியார் பாசறையில் பயின்று தமிழகத்தின் தனிப்பெருந்தலைவராக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டதே 'அண்ணா கோவை' என்னும் சிறந்த நூலாகும்.

கோவையெனும் சிற்றிலக்கியம்; கட்டளைக் கலித்துறையால் பாடப்பெறுபவையாகும். எழுத்தெண்ணிப் பாடப்படுவது கட்டளைக் கலித்துறை. இதனைப்பாடுவது எல்லோருக்கும் எளிதன்று. அதிலும் கோவை இலக்கண மரபுவழியில் பாடியவர்கள் மிகச் சிலரே! அந்தச் சிலரில் ஒருவராகப் புலவர் மணியன் அவர்கள் திகழ்வது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அண்ணா அவர்களின் அறிவாற்றலையும், ஆட்சித்திறனையும், கொள்கை கோட்பாடுகளையும், பகைவனுக்கும் அருளும் நெஞ்சத்தையும், குடும்பப்பாசத்தோடு கழகத்தை நடாத்தி, குன்றிலிட்ட குலவிளக்காய் விளங்கிய பாங்கினையும், தமிழுக்காக—தமிழ் மக்களுக்காக—தமிழ்நாட்டிற்காக அவர் ஆற்றிய தொண்டினையும் ஒவ்வொரு பாடலிலும் தமக்கே உரிய புலமையாற்றலால் எளிய நடையில், உவமை நயத்தோடு, கவிநயம் சொட்டச் சொட்ட எடுத்தியம்பியிருப்பது படிப்போரின் உள்ளத்தை ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் —

என்னும் திருக்குறளுக்கொப்ப வாழ்ந்த அண்ணாவை,

'கேட்டாரை ஈர்த்துப்பின் கேளாரை வீழ்த்தும்தன்
கேள்விகொண்டே
நாட்டாரை வென்றுபின் நாடாளும் அண்ணாவாழ்
நாட்டினிலே''

எனக் குறிப்பிடுவது எண்ணி மகிழத்தக்கதாகும்.

அண்ணா நாடாண்டபோது முக்கியமான முடிவெடுக்கக் கலைஞர் அவர்களைத் தம்பக்கம் இருக்குமாறு செய்து கொள்வார் என்பதை,

"முக்கியமான முடிவேதும் செய்திட முற்படுங்கால்
பக்குவ மாயின்று பாரினை யாளும்கலைஞரைத்தன்
பக்கமே கொண்டண்ணா வந்ததைப் போலவே
பாங்கிமாரே
புக்கனர் போனதும் பூவையும்காளையும்ஊர்ப்புறத்தே''

என்ற பாடலால் கவிஞர் குறிப்பிடுகிறார்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது இந்நூல் எழுதப்பட்டதால் 'இன்று பாரினை யாளும் கலைஞர்' எனக் குறிப்பிட்டிருப்பதை உணர்க.

அரசியலில் பகைமை கொண்ட மாற்றுக் கட்சித் தலைவர்கள் அனைவரும் அண்ணாவைப் பாராட்டுவதில் ஒன்று பட்டார்கள் என்பதை,

ஆச்சாரி யார்முதல் காமரா சர்வரை அண்ணனைநல்
பேச்சாளி நாட்டாளி பாட்டாளி யென்றெல்லாம்
பேசுமாறின்

என அரசியலில் இரு துருவங்களாக விளங்கியஇராசாசி காமராசர் இருவரை மட்டும் குறிப்பிட்டு மற்றவர்களை உள்ளடக்கிக்கூறியுள்ள கவிஞரின் கவிநயம் பாராட்டுக்குரியதாகும்,

அண்ணாவின் அரசியல் வாழ்வில் பங்கு கொண்டு பணியாற்றிய தம்பிமார்களையும், தமிழறிஞர்களையும் ஏனைய அரசியல் தலைவர்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டுப் பாடியிருப்பது கவிஞர் அவர்கள் நேரடியாக அரசியலில் பங்கு பெறவில்லை என்றாலும் அரசியலை நன்கு அறிந்திருக்கிறார் என்பது புலனாகிறது.

தஞ்சைவாணன் கோவை, சந்திரவாணன் கோவை வரிசையில் நிலைத்துநிற்கக்கூடியது 'அண்ணா கோவை'. இதனைப் பாட நூலாக அரசு பயன்படுத்தினால் நூலாசிரியர்க்கு மட்டுமின்றி, அண்ணாவுக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

எளிதில் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் பாடல்கள் அமைந்திருப்பினும் விளக்கவுரையும், தெளிவுரையும் எழுதி நூலுக்கு மேலும் அணி சேர்த்திருக்கிறார் உரையாசிரியர் ச. சாம்பமூர்த்தி; அவர்தம் உரை பாராட்டுக்குரியதாகும்.

அண்ணாவின் அரசியல் வாழ்க்கையை அறிந்து கொள்ள விரும்புவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன் பெறும்.

தமிழ் மக்கள் இந்நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

—நெ. அ. பூபதி

நூல் கிடைக்குமிடம்:
'கற்புக்கரசி' பதிப்பகம்,
2, வெங்கடகிருஷ்ணன் தெரு,
வண்ணையம்பதி, சென்னை-21.

இந்திய பொருளாதாரம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டிலே தகர்ந்திடவில்லையே? ஒழிந்திடவில்லையே!

எத்துணை இழிந்த வாழ்வு வாழும் ஏழை மனிதனும் அரைப் பவுன் அளவுக்கேனும் தாலி கட்டித்தானே திருமணம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் சமுதாய அமைப்பு இருக்கிறது!

அந்த அரைப் பவுன் தங்கத்துக்கு ஐந்நூறு ரூபாய்களை அழ வேண்டும் என்றால் எந்த ஏழையின் குடும்பமும் இடிப் பொடிந்து போகாதா?

ஒரு புறத்தில் ஒரு பவுன் தங்கத்தை ஆயிரம் ரூபாய் வரை ஏலம் எடுக்க கூடிய முதலாளித்துவப் பண வெறியை விசிறி விடுவது;

மற்றொரு பக்கத்தில் தாலிக்குக் கூடத் தங்கம் வாங்க முடியாதபடி இந்த நாட்டு ஏழை - எளிய நடுத்தரக் குடும்பங்களை வறுமை நெருப்பிலே தள்ளி விடுவது.

இது என்ன வகையான பொருளாதாரக் கொள்கை என்றே நமக்குப் புரியவில்லையே?

இதைப்பற்றி மத்தியநிதி அமைச்சர் மாண்புமிகு எச். எம். பட்டேல் அவர்களைச் செய்தியாளர்கள் கேட்டால் —

கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்குத்தான் தங்கத்தை ஏலம் விடும் கொள்கையைச் செயற்படுத்தினோம். இதனால் தங்கத்தின் விலை ஏறாது என்று நான் சொல்லவில்லையே?'' —

என்கிறார்.

நாட்டின் மிக உச்சமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு நிதித்துறையை நிருவாகம் செய்பவரே இப்படிச் சொன்னால் - இந்த நாட்டு ஏழைகளின் வறியவாழ்வில் எப்படித்தான் விடிவு காலம் ஏற்பட முடியும்?

அன்டை நாடு அளிக்கும் பாடம்

இதே வேளையில் அண்டை நாடான செஞ்சீன நாட்டின் நிலை என்ன?

அதைப் பற்றி இந்தியப் பொருளாதாரவல்லுநர்கள் — நிதியமைச்சர்கள் — நிதித்துறை அதிகாரிகள்—எள்ளளவேனும் எண்ணிப் பார்க்கிறார்களா?

அங்குள்ள பொதுவுடமை அரசு 1976—ல் பொருளாதாரம் பற்றிய சிறிய நூல் ஒன்றை வெளியிட்டது.

அதன் தலைப்பு:

சீனாவில் ஏன் பணவீக்கம் இல்லை? என்பதாகும்.

நாற்பத்து நான்கே பக்கங்கள் கொண்ட சிறிய நூல் தான், ஆனால் அதில் தரப்பட்டிருக்கின்ற தகவல்களோ பிற நாடுகளில் உள்ள அத்தனை அரசுகளும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை ஆகும்.

(தொடரும்)

இந்தியப் பொருளாதாரம் ஏற்றம் பெறுமா?

(2)

தமது இனிய நோக்கம் ஈடேறுவதற்காகத் தமது சொந்தக் கட்சிக்கு அப்பாற்பட்ட மாற்றுக்கட்சி வல்லுநர்களையும் நிதித்துறையினை நிருவகிக்க ஏற்பாடு செய்தார் நேரு.

ஆயினும் அவரது கனவு நனவாகவில்லை; மழையில் முளைத்த காளான்களாவே அவரது திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கைகள் தேய்ந்து போயின; தீய்ந்து போயின

காரணம் மேலே குறிப்பிட்ட சவகர்லால் நேருவின் சமதர்ம உணர்வோ பொதுவுடைமை ஈடுபாடோ இல்லாத — பாட்டாளி மனப்பாங்கு இல்லாத — முதலாளித்துவப்பொருளாதாரத்தை அறிந்தவர்கள் மட்டுமே நிதித்துறையை — திட்டக் குழுவை நிர்வகிக்க முன்வந்தார்கள்.

இந்தியாவின் வறுமைக்கு முடிவு கட்ட நேருவுக்கு முன்னரும் சில அறிஞர்கள் தங்கள் மூளைக்கு வேலை கொடுத்தனர்.

அவர்களுள் முதன்மையானவராகக் கருதத் தக்கவர் த தாபாய நவ்ரோஜி அவர்கள்.

1876—ஆம் ஆண்டிலேயே 'இந்தியாவின் வறுமை' என்னும் தலைப்பில் முதன் முதல் கட்டுரை ஒன்றைத் தீட்டி இந்நாட்டுமக்களின ஏழைமையைப் படம் பிடித்துக் காட்டினார் அவர்.

1885—இல், இந்தியதேசிய காங்கிரசுக் கட்சி தோன்றுவதற்கு முன்பே — ஆங்கிலேயரின் ஆதிக்கம் இங்கே ஓங்கியிருந்த காலத்திலே — தாதாபாய் நவ்ரோஜி அவர்கள் வறுமையில் திணறும் இந்தியாவைப் பற்றுக் குரல் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருக்குப் பின்னால் விடுதலை இயக்கமாக வடிவெடுத்த தேசியக் காங்கிரசுக் கட்சியும் இந்தியப் பொருளாதாரம் பற்றி அவ்வப்போது சிந்தனையைச் செலுத்தித் தீர்மானங்களை நிறைவேற்றியது.

என்றாலும் திட்டமிட்ட பொருளாதாரம் என்னும் கோட்பாட்டுக்கு மக்களின் திட்டம்' என்னும் தலைப்பில் ஒரு முறையான வடிவம் கொடுத்தவர் திரு எம். என் ராய் அவர்கள்,

1944 ஆம் ஆண்டில் அவர் தமது பொருளாதாரச் சிந்தனைகளை வெளியிட்டார். பின்னால் நேருவின் காலத்தில் திட்டக் குழுவை அமைப்பதற்கும் அவரது எண்ணங்கள் எருவாக—தூண்டுகோலாகப் பயன்பட்டன,

என்றாலும் கூட இந்தியப் பொருளாதாரம் இன்னும் இருண்டுதான் கிடக்கிறது,

முதலாளிகளை மேலும் முதலாளிகள் ஆக்காத—பட்டினி கிடப்போரின் தொகை மேலும் பன்மடங்கு பெருகாத பொதுமைப் பொருளாதார வெளிச்சம் போதிய அளவுக்கு இந்தியா மீது விழக்கூடிய புதிய நோக்கு எப்போதுதான் இங்கே மலரப் போகிறது?

'பொதுவுடைமைப் பூங்கா 'சமதருமச் சமுதாயம்' என்றெல்லாம் விண்ணதிர முழக்கங்கள் வீறு கொண்டு ஒலிப்பதைக் கேட்கின்றோம்,

ஆனாலும் மாடமாளிகைகள் எழும்பிய வண்ணமே இருக்கின்றன. ஓட்டைக் குடிசைகள் ஒழுகிய வண்ணமே இருக்கின்றன.

நீச்சல் குளத்திலே நேரிழைகளோடு நீந்திக் களிப்பவனும் இருக்கத்தான் இருக்கிறான்,

காய்ச்சலுக்கு மாத்திரை வாங்கவே காசில்லாமல் கண் மூடிக் கிடப்பவனும் கிடக்கிறான்,

'நட்சத்திர ஓட்டல்'களில் ஒரே ஒரு நாள் தங்குவதற்கு மட்டுமே இருநூறு முந்நூறு என்று அறைக்கு வாடகை அளித்து விட்டு மது, மங்கையரோடு கும்மாளம் போடுகிறவனும் போடுகின்றான்.

எச்சில் இலைக்கு அலையும் நாயினும் கீழாக இடுப்பொடியப் பாடுபட்டுவிட்டு— உழைத்த உழைப்புக்கேற்ற ஊதியமே கிட்டாமல் — தூக்கிலே தொங்கித் தூங்கிக் போகிறவனும் இருக்கிறான்?

ஏன் அந்த ஏற்றம்?
ஏன்இந்த இறக்கம்?
ஏன் அந்த பகட்டு?
ஏன் இந்த இருட்டு?
ஏன் அந்தப் பன்னீர்?
ஏன்இந்தக் கண்ணீர்?

மறைமலையான்

பொருளாதாரக் கொள்கையை வகுக்கின்றவர்கள் மலையையும் மடுவையும் நிரவல் செய்யும் நெஞ்சோடும் செயலாற்றவேண்டாமா?

தங்கம் தரும் அதிர்ச்சி

அண்மையில் அகிலப் புகழ் பெற்றவரும் உலகவங்கியின் தலைவருமான இராபர்ட் எஸ். மக்னமாரா இந்தியாவுக்கு வந்திருந்தார்

9—10—1978 அன்று புதுடில்லியில் இந்தியத் தலைமையமைச்சர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்களையும் மற்றச் சில மைய அமைச்சர்களையும் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

அப்போது இந்தியாவின் எதிர்காலப் பொருளாதாரம் ஏற்றம் பெறுவதற்கான வழிதுறைகளை எவ்வாறெல்லாம் மைய அரசு வகுத்திருக்கிறது என்பதை நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எழில் மிக்க ஓவியங்களாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அவற்றைக் கேட்டறிந்த இராபர்ட் மக்னமாரா இந்தியப் பொருளாதாரக் கொள்கையை மிகவும் மனந்திறந்து பாராட்டியிருக்கிறார்,

அவரது புகழ்ச்சியுரையைப் பற்றி ஏடுகளில் படிக்கப் படிக்க நம் உள்ளத்தில் உண்டாகும் பூரிப்புக்கு எல்லையே இல்லைதான்!

ஆனால் அடுத்த சில நாட்களிலேயே நமக்கு அதிர்ச்சியூட்டும் செய்திகளும்ஏடுகளில் வருகின்றன.

ஓர் எடுத்துக்காட்டு: மைய அரசே தங்கத்தைஏலம்விடமுற்பட்டதில் இன்று 22 காரட் மதிப்புள்ள 8 கிராம் எடையுள்ள ஒரு பவுனின் விலை (இந்தக் கட்டுரையை எழுதும் பொழுது 16–10—78)ரூபாய் 750—ஐ எட்டிப் பிடித்துவிட்டது.

அடுத்த சில வாரங்களில் இதுவே ஆயிரம் ரூபாய்க்குப் போய்விடும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது,

இன்றைய மைய அரசு புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவுக்கூர்மையோடு வகுத்திருக்கலாம். ஆனால் தங்கத்தின் விலை இந்த அளவுக்கு உயர்வதற்கு இடம் கொடுப்பானேன்?

1968—இல் ரூபாய் 128 ஆக இருந்த ஒரு பவுன் தங்கத்தின் விலை பத்தே ஆண்டுகளில் ஆயிரம் ரூபாய்க்கு உயர்கிறது என்றால் இந்தச் சிந்தனைக்குப் பிடிபடாத இந்தியப் பொருளாதார நிலையை என்னவென்று கூறுவது?

ஏழையின் தாலி?

இதனால் ஏற்படக்கூடிய விளைவு என்ன?

பண முதலைகள்தான் தங்க நகைகள் பற்றியே நினைத்துப் பார்க்க முடியும்.

கறுப்புப் பணமும் கள்ளப் பணமும் வைத்திருப்பவர்கள் வேண்டுமானால் தங்கத்தை வாங்கிக் குவித்துக் கொள்ளலாம்,

சாதாரண நாட்டுப்புறத்தில் உள்ள ஏழை உழவனின் நிலை என்ன? நகர்ப்புறத்தில் உழலும் பாட்டாளித் தொழிலாளியின் நிலை என்ன?

என்னதான் தந்தை பெரியார் பகுத்தறிவு வெளிச்சத்தைப் பரப்ப முயன்றும் தாலி கட்டும் வழக்கம் இன்னுத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

அ. தி. மு. க. குண்டர்களின் வெறிச் செயலுக்கு முடிவுகட்டுக!

சென்னை மாநகருக்கும், அதன்சுற்றுப்புறங்களுக்கும்கள்ளச் சாராயம் வினியோகம் செய்யும் மொத்த குத்தகைதாரரும் எம். ஜி. இராமச்சந்திரனின் 'மெய்க்காப்பாளர்' என்று சொல்லப்படுபவரும் ஆன 'மாவீரர் ஒருவர் தலைமையில்—

அ. தி. மு. க. வைச் சேர்ந்த 'ரௌடிகள்' முழுக்கடை அடைப்பு, பொது வேலை நிறுத்தம் நடந்த நாளான அக்டோபர் 23 ஆம் தேதி அன்று — பிற்பகலில் கோபாலபுரத்திலிருக்கும் — கழகத்தலைவர் கலைஞர் வீட்டைச் சூழ்ந்துகொண்டு பயங்கரமாகத் தாக்கியுள்ளார்கள்.

சோடாபுட்டிகளாலும், கற்களாலும் அந்தக் காலிகள் கலைஞர் வீட்டு விளக்குகளையும், சன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கியபோது—அங்கிருந்த போலீசார் அவர்களைத் தடுத்து நிறுத்த எந்த முயற்சியும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

போலீசாரின் துணையோடு — பின் பலத்தோடு— அ. தி. மு. க. குண்டர்கள் ஆடிய 'வெறியாட்டம்' கண்டு நாடே காரி உமிழ்கிறது!

கலைஞர் இல்லத்தைச் சூழ்ந்து சூறையாடியதோடு வெறி தணியாத அந்தப் புல்லுருவிகள் முரசொலி மாறனின் மகனான அன்புமீதும் கற்களை எறிந்து காயப்படுத்தியுள்ளார்கள்.

மு. க. முத்து, திரைப்பட இயக்குநர் சொர்ணம் ஆகியோரின் வீடுகளும் அந்த 'அராஜகவாதி'களின் தாக்குதல்களுக்கு ஆளாகின.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் எம். கல்யாணசுந்தரம் எம். பி. தமிழ்நாடு மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் ஏ.பாலசுப்பிரமணியம், கழகதுணைப் பொதுச் செயலாளர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். பி, ஜி. இலட்சுமணன் எம். பி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் துணைத் தலைவர் எம். ஆறுமுகசாமி. யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமது, காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் பொதுச்செயலாளர் தெள்ளூர் தருமராசன், பார்வர்டு பிளாக் கட்சித் துணைத்தலைவர் இரா. திருமறவன் இந்தியக் குடியரசுக் கட்சித் தலைவர் சக்திதாசன் — ஆகிய அனைத்துக் கட்சித் தலைவர்களும் அ. தி. மு. க. வினரின் வன்முறைப் போக்கினுக்கு ஒரு முடிவு கட்டக் கோரி குடியரசுத் தலைவர் சஞ்சீவரெட்டி, பிரதமர் மொரார்ஜிதேசாய், தமிழக ஆளுநர் பட்வாரி ஆகியோருக்குத் தந்திகள் அனுப்பியுள்ளனர்!

தந்தி வாசகங்கள் வருமாறு:

"அ. தி. மு. க. பொதுச்செயலாளரும் தமிழ்நாடு முதலமைச்சருமான எம். ஜி ராமச்சந்திரன் தூண்டுதலின்பேரில் ஆளுங் கட்சியைச் சேர்ந்த 500 ரௌடிகளும் கள்ளச்சாராயப் பேர்வழிகளும் 23-10-78 அன்று தி. மு க தலைவர் கலைஞர் கருணாநிதியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு சோடா பாட்டில்கள் வீசியும் கல்லெறிந்தும் தாக்கினார்கள்.

இதனால் இப் பகுதியில் பெரும் பீதியும் பதட்டமும் ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. காவல்துறையினர் செயல்படாமல் இக்கொடுஞ்செயல்கள் நடைபெற்றதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தனர்!

தி. மு. க மற்றுமுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களது வீடுகளையும் அலுவலகங்களையும் தாக்க அ. தி. மு. க. வினர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது

இனியும் இதுபோன்ற அராஜக வெறியாட்டம் தொடராமல் செய்ய உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கக் கோருகிறோம்."

விஷம் இனிது

கருணாநிதி

"ஜெகவீரா, சத்தியவதியின் போக்குப் பிடிக்கவில்லை மகனே!''

"அம்மா!''

"ஆம் செல்வனே. சத்தியவதி பருவப் பெண், பட்டத்து ராணி. அவள் இஷ்டப்படி வேற்றுடவர்களோடு பேசுவது தகாது. தீக்குளித்த திலகங்களைப் பெற்றெடுத்த ராஜபுத்திர வம்சத்துக்கே அது அவமானம்!''

"அம்மா என்ன சொல்கிறீர்கள்? சத்தியவதி என்ன செய்தாள்? யாரோடு சரசம் செய்தாள்? சொல்லுங்கள்?''

"ஆத்திரப்படாதே! நேத்திரத்தைப்போல நீ அவளை நேசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும்...!'

"என்னம்மா ஆனாலும்...?'

"உன் தம்பியும் அவளும் அடிக்கடி தனித்து உரையாடுவது எனக்குப் பிடிக்கவில்லை ஜெகவீரா! நீ கொஞ்சம் கண்டித்தால் அவள் கட்டுப் பட்டு விடுவாள் என்று தான் சொல்கிறேன்.''

"தம்பி அர்தோலைப்பற்றி அப்படியெல்லாம் தப்பாகச் சொல்லாதீர்கள் அம்மா! அவன் ஒரு சொக்கத் தங்கம் - சுடர்மணி விளக்கு!''

"ஜெகவீரா! நீயோ டெல்லிக்குப் போகிறாய். வர நாள் பிடிக்கும். இப்போதே எச்சரித்து விட்டேன். நான் சத்தியவதியைத் தவறு கூறுகிறேன் என்று கருதாதே. தவறான பாதைக்கு அவள் சென்றுவிடக்கூடாது என்பது தான் என் எண்ணம்.''

"சரியம்மா; கவனித்துக் கொள்ளுங்கள் எல்லாவற்றையும் நல்லவிதமாக! நான் புறப்படுகிறேன்.''

★

ஜெகவீரசிம்மன் ஒருகாலத்தில் ஒரிசா மக்களின் இதய விளக்கு. பதினேழாம் நூற்றாண்டில் அந்த மண்டலத்து மாந்தர்களின் மட்டற்ற செல்வாக்கைப் பெற்ற யுவராஜன். சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு முடிசூட்டு விழா டில்லியில். அழைப்பு வந்திருக்கிறது. ஜெகவீரனுக்கு: வீரர் ஆயிரவருடன் அவன் டெல்லிப் பயணம் புறப்படும்போதுதான் அவனது தாய் அமிர்தராணி அங்குவந்து மருமகள் சத்தியவதியைப் பற்றிய புகார்களைக் கூறினாள். விடை பெற்றுச் செல்ல வந்த வேந்தன் தாக்குண்டான் சொல் வேலால்! புள்ளிமான்களுக்குப்பரிந்து அவன் பிணமாக்கியுள்ள புலிகளுக்குக் கணக்கில்லை. களத்தில் குதித்துவிட்டால் கண்மூடித் திறப்பதற்குள் கணக்கற்றோர்பிணமாவார் அவன் கத்தி வீச்சால்! அத்தகைய மாவீரனை அன்னையின் சொல்லம்புகள் சுருள வைத்துவிட்டன. தன் இன்ப வாழ்வில் ஏதோ ஒரு இழுக்குப் படர ஆரம்பித்து விட்டது என்பதால்தான் அம்மா எச்சரிக்கைக் கணையைத் தொடுத்திருக்கிறாள் என்று எண்ணினான். அதனால் ஏங்கினான். டெல்லிக்குப் பயணமானான், வாடியமுகத்தோடு!

அவன் இருதயத்தை அரித்திடும் பிரச்சனையாகிவிட்ட சத்தியவதி அவனது ஆசை ராணி. ஒரிசாவின் புதிய மீராபாய் இவள்தான் என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கடவுளிடத்திலே பக்தி கொண்டவள். கணவன் ஜெகவீரனிடத்திலே பிரேமையும், தன் தேசத்தினிடத்திலே அன்பும் கொண்ட அந்த ராணிக்கு ஒரே ஒரு குறை மட்டும் இருந்து வந்தது, அக்குறையைத் தீர்த்துவிடச் சமயத்தை எதிர் நோக்கியிருந்தாள் சத்தியவதி. ஜெகவீரனின் தந்தையும். அவளது மாமனருமான வீரசிம்ம வேந்தர் புலியொன்றினால் தாக்கட்பட்டு உயிர் விடும் தருணம், தன் மகன் ஜெகவீரனிடத்திலும் சத்தியவதியிடத்திலும் தனது இளைய மகன் அர்தோலை ஒப்புவித்துப் பாதுகாக்கும்படிச் சொன்னதோடு, தன் நினைவாக இராம பிரான் கோயில் ஒன்று கட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அப்போது தந்தையின் உத்திரவை நிறைவேற்றுவதாக ஜெகவீரன் வாக்களித்தான். தந்தையின் நினைவாகக் கட்டும் ஆலயம் மிகச் சிறப்புடையதாயிருக்கவேண்டும; அதற்கு ஏராளமான பொன் வேண்டும் — பொக்கிஷ நிலை சரியில்லாத இந்தச் சமயத்தில் எப்படிஅந்த ஆலயத்தை நிர்மாணிப்பது என்று தயங்கினான். சத்தியவதியோ மாமனருக்கு அளித்த வாக்கை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென்று துடித்துக்கிடந்தாள். மாமன் ஆசைப்படி அவரது இளைய செல்வன் அர்தோலை நன்கு பாதுகாத்தாள், அதன் காரணமாக அர்தோல். அவளைத் தன்சொந்த அன்னை போலவேபாவித்தான். ஆண்டவனுக்கு ஆலயம் விரைவில் கட்டியாகவேண்டும் என்ற ஆசையை சத்தியவதி, அடிக்கடி அர்தோலிடம் தெரிவித்து வந்தாள்.

"அர்தோல்! அரசர் டில்லியிலிருந்து திரும்ப நாளாகுமல்லவா?''

"ஆம் அம்மா! நான்கு மாதங்களாவது பிடிக்கும்.''

"அதற்குள் ராமன் ஆலயத்தை நாம் எப்படியும் கட்டி முடித்து விட்டால் அவர் திரும்பி வந்ததும் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார் தெரியுமா?''

"தாயே' அது உண்மை தான். தேவாலயத்தை நாளைக்கே எழுப்பிவிடலாம் அதற்கானப் பொருள் கருவூலத்தில் இல்லையே!''

"எங்கேயோ வைரச் சுரங்கம் இருப்பதாகச் சொன்னாயே, அது என்ன ஆயிற்று அர்தோல்?''

"ஆமாம் இருக்கிறது. நாட்டு மக்களின் வரிப்பளு வைத் தடுக்க அந்த வைரங்களைப் பயன்படுத்தலாமென எண்ணினேன்,''

"முதலில் என் மனப் பளு தீர வேண்டும் அர்தோல்; ராமனின் ஆலயம் அமைந்து விட்டால் நாட்டிலே எக் கேடும் கிளம்பாது. இருக்கும் தீமைகளும் அழிந்துபடும். ஆகையால் முதலில் கோயில் திருப்பணியைக் கவனி.'!

"வைரச் சுரங்கத்திலிருந்து மிக ரகசியமாக வைரங்களைச் சேமிக்க வேண்டும். சுரங்கம் நம்நாட்டில் இருப்பது தெரிந்தால் உடனே சுரண்டும் டெல்லி சூறுவளி வேகத்தில் புறப்பட்டு வரும் வைரம் எங்கே என்று வாயைப் பிளந்தபடி!''

"சரி அர்தோல்; டெல்லியில்தான் விழாவும் வேடிக்கையுமாக இருக்கிறதே; இந்த நல்ல நேரத்தில் நாம் வைரங்களை ரகசியமாகச் சேமித்து, வைகுந்த நாதனின் கோயிலைக் கட்டி முடித்து விடுவோம்''

"கட்டளை தாயே!''

சத்தியவதியின் எண்ணத்தை நிறைவேற்ற அர்தோல் புறப்பட்டுவிட்டான்.

ஃ ஃ ஃ

முடிசூட்டு விழாவுக்கு முன் கூட்டியே அழைக்கப்பட்டிருக்கும் ஜெகவீரனுக்கு அங்கு மனம் இருப்புக் கொள்ளவில்லை. சத்தியவதி சாகசக்காரியா? அல்லது பெற்றெடுத்த மர்தாபொய்க் குற்றம் சுமத்துகிறாளா? அல்லது தம்பி அர்தோல் தான் துரோகம் புரிகிறானா? என்ற மனப் போராட்டம் அவன் உள்ளத்தில் குமுறி எழுந்தது. அந்தப் போரின் உச்ச கட்டமாக அவனுக்கு ஒரிசாவிலிருந்து ஓர் ஓலையும் வந்து சேர்ந்தது. பிரித்துப் படித்தான்; மீண்டும் கண்களை விரித்துப் படித்தான், ஆம்; அவனது அன்னை எழுதிய கடிதம்தான் அது;

"அன்புச் செல்வா—அணை போடச் சொன்னேன், வெள்ளம் வருவதற்கு முன்பே! கணை தொடுக்கிறேன் என்றாய் அப்போது. இப்போது விளைவு விபரீதமாகி விட்டது; ஒவ்வொரு அர்த்தராத்திரியிலும் அர்தோலைச் சந்திக்க சத்தியவதி புறப்பட்டு விடுகிறாள். இதை என்னால்மெய்ப்பிக்க முடியும். கேட்டால் சொல்லுகிறாள். கோயில் கட்டத் திட்டம் போடுகிறோம். என்று! களங்கம் நமது வம்சத்தை அழித்து விடுவதற்கு முன்பு நீ புறப்பட்டு வா;

உன் அன்னை,

"அமிர்தராணி'

ஓலையைக் கண்ட ஜெகவீரன் தலை சுழன்றது. டில்லி பாதுஷாவின் பட்டாபிஷேக மண்டபத்திலே அமுத வீணையின் இன்பநாதம்; வீரசிம்மனின் மனக்குகையில் அறுந்த நரம்புகளின் முறுக்குப் பிரியும் ஜீவனற்ற 'கீச்' ஒலி! அங்கே முரசின் முழக்கம், இங்கே ஒரிசா அரசின் கலக்கம்; உடனே புறப்பட்டு விட்டான் தன்னகம் நோக்கி!

இரவு நேரம்; வைரம் நிறைந்த பேழை. அந்தப் பேழை தான் ராமருக்குக் கோயிலாக உருவெடுக்கப் போகிறது. கோயில் கட்டுவதற்கு முன்பே கோயிலில் வைக்க விக்கிரகம் தயாராகி விட்டது. அதன் முன்னே அமர்ந்து ராமகீர்த்தனை பாடிக் கொண்டிருக்கிறாள் சத்தியவதி. தன் மாமனாரின் அன்புக் கட்டளை நிறைவேறப் போகிறது. மணாளன் திரும்பி வரப் போகிறான், வந்ததும் ஆலயத்தைக் கண்டு அதிசயத்தால் மகிழப் போகிறான். நாடு சுகமடைய இந்த ராமபிரான் கோயில் கொள்ளப் போகிறார். இப்படியெல்லாம் எண்ண அலைகள் எழும்பிடச் சத்தியவதி பூஜையில் ஈடுபட்டிருந்தாள். பூஜை முடிந்தது. வைரங்களை எடுத்து மறைவாக வைப்பதற்காகச் சத்தியவதி அர்தோலை அழைத்தாள்.

"அர்தோல்' அர்தோல்''

"இதோ வந்துவிட்டேனடி கள்ளி'' என்று கூறியபடி அங்கே நுழைந்தான் ஜெகவீரன். சத்தியவதி திடுக்கிட்டுத் திரும்பினாள்,

"பிரபு!''

"எட்டி நில்! கண்ணுக்கு அழகு தரும் காஞ்சரங் கனியே; இந்த மண்ணுக்கே அவமானம் விளைத்த மாபாதகி! எட்டி நில்!'

"என்ன சொல்லுகிறீர்கள்?'

"எங்கே உன் ஆசை நாயகன் அர்தோல்?''

"ஆ! அப்படிச் சொல்லாதீர்கள் பிரபு! அர்தோல் எனக்கு மகன்போல.—அவன் என் ஆசைச் செல்வன்.'

"மகனோடுதான் நடுராத்திரியிலே— தனியிடத்திலே— அடிக்கடி சந்தித்துப் பேசுகிறாயாக்கும்?''

"ஆமாம்—அதில் என்ன தவறு! ஆண்டவனுக்கு ஆலயம் அமைக்க அர்தோலுடன் பேசினேன். திட்டங்கள் தீட்டினோம். திருப்பணி ஆரம்பமாகிவிட்டது!'

"தீயே! போதும் நிறுத்து''

"இதோ இந்த வைரங்களைப் பாருங்கள் பிரபு! ராமர் ஆலயம் கட்டுவதற்குச் சேர்த்தவை. இப்போதாவது நம்புங்கள்.'

"ஆலயம் கட்ட அல்லடி வைரம்! அர்தோல் உன் ஆலிங்கனத்துக்குத் தந்த பரிசு இது! தெரியும் எனக்கு!

"ஐயோ, ஐயோ,''

"ஏனடி காதை மூடிக் கொள்ளுகிறாய்? கண்ணை மூடிக் கொண்டு காமக் கடலில் விழுந்துவிட்டு, ஊரை ஏமாற்றக் ராமக் கடவுளைப் பூசிப்பவளே! பாசாங்கு செய்யாதே!''

"பிரபு! என் கற்பை இகழாதீர்கள். என் இருதயத்தின் சாபத்திற்கு இரையாகாதீர்கள்.''

"என்னடி நீலி! அர்தோல்மீது உனக்குக் கள்ளக் காதல் இல்லையானால் இதோ இந்த விஷத்தை உன் கையாலேயே அவனுக்குக் கொடு பார்ப்போம்.''

"அவனுக்கா; வேண்டாம்! நானே சாப்பிட்டுச் சாகிறேன்!''

"முடியாது! அர்தோல் உன் கையால் விஷம் அருந்த வேண்டும்.''

"அப்படியே ஆகட்டும்!''

சத்தியவதி விஷத்தை வாங்கிக் கொண்டு ஓடுகிறாள்.

தேவாலயத் திட்டங்களைப் போட்டவாறு அர்தோல் அயர்ந்து தூங்கிவிட்டான். அப்போதுதான் கையில் விஷக் கோப்பையுடன் அங்கே சத்தியவதி நுழைந்தாள்.

"அர்தோல்''

"இந்தா—இந்தப் பாலைக் குடி!''

"பாலா? இந் நேரத்திலா?''

"ஆமாம் — என்னைப் பத்தினியென நிரூபிக்க நீ பாஷாணம் கலந்த பாலைச் சாப்பிட வேண்டுமாம்''

"என்ன?—தாங்கள்—?''

"உன் ஆசைநாயகியெனக் குற்றம் சாட்டிவிட்டார் அரசர் — இல்லையென்பதை நிரூபிக்க, என் கையாலேயே நீ விஷம் சாப்பிட வேண்டுலாம்.''

"ஆ! அம்மா! யார் கட்டிவிட்ட பழி இது? அரசரா நம்பினார் இதை? என் அண்ணா, இந்த வீண் புகார்களை நம்பி, தம்பியைத் தகாப் போக்குடையோன் எனக் கூறவும் துணிந்து விட்டாரா? அண்ணா! அண்ணா என் மனம் புண்ணாகும்படி ஏன் அண்ணா அப்படிப் பேசினீர்கள்?''

"அய்யோ! அம்மா! என்னால் தாங்க முடியவில்லையே!''

"பேச நேரமில்லை அர்தோல்! என் அன்பு மகனே, நீ விஷத்தைச் சாப்பிட்டால் தான் ராஜ்புத்திர வம்சத்தின் மானமே காப்பாற்றப் படும்.''

"சாப்பிடுகிறேன், ஏ விஷமே! நீதான் என் அன்னையை அவதூறிலிருந்து காப்பாற்றுகிறாய், ராமருக்குக் கோவில் கட்டிடத் துவங்கினோம் — ராமர் சிலையும் அழகாகச் செதுக்கினோம் —அந்த ராமரோ — அவர் பரிவாரமோ வந்து என் அண்ணாவிடம் சொல்லத் துணிந்திடவில்லை! தாயின் மீது, புரியாதார் சுமத்தும் பழியை—விஷமே —நீயாவது துடைக்க வந்தாயே! உனக்கு நன்றி! விஷம் இனிது! விஷம் மிக இனிது! ஆண்டவனை விட இனிது! நம்பினோர்க்குக் கை கொடுக்காத ராமனை விட இந்த விஷம் இனிது'' என்று கூறியபடி சத்தியவதியின் கையிலிருந்த விஷத்தை வாங்கிக் குடித்தான்—வீழ்ந்தான்—இறந்தான்!

சத்தியவதி கண்ணீரால் அவனைக் குளிப்பாட்டினாள். தன்தவற்றைப் பிறகு தானே உணர்ந்து நொந்தான் ஜெகவீரன்! அமிர்தராணியும் பிறகு அழுதாள். எல்லோரும் காரியம் முடிந்த பிறகு கண்ணீர் வடித்துப் புலம்பினார்கள். அப்படிப் புலம்பாமலிருக்க, அய்யன் ராமபிரான் ஜெகவீரனிடம் வந்து, சத்தியவதியின் தூய்மையை எடுத்துக் கூறியிருக்கலாம்! எப்படிக் கூற முடியும்? கூறியிருந்தால் அர்தோல் **ஆண்டவனை விட ஆலகாலம் இனிது** என்று கூறியிருக்க மாட்டானே!

★







தலைவர் கலைஞரின் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி!

(அனுப்பியோர் பட்டியல்)

8-10-78 தேதிய இதழ் தொடர்ச்சி ரூ. 78341—25

உ. அழகப்பன், ஒட்டேரி, நம்மாள்வார்பேட்டை பி, வேணுகோபால், தஞ்சை இரகுநாதபுரம் வ்.இராசகோபால், மூங்கில்கரை க. பெ. சுப்பிரமணியன், திருச்சி வி. இளம்பரிதி, தஞ்சை கோவிந்தராசன், ஓமாம்புலியூர் ப. கிருட்டிணசாமி. திருட்பூர் உதயசூரியன் மெடிக்கல்ஸ், அவிஞசி எஸ். பி. கணபதி (5.00) பி. துரைராஜ் (5.00), தாமல்நகர் முத்துராஜ், அம்மாப்பேட்டை ஆ. அங்காயி, ஏ. ஆறுமுகம், ஆ.குணசேகரன், பு. புளியம்பட்டி பி. என். அங்கப்பன், எஸ. சீத்தாராமன், சின்ன மேட்டுப்பாளையம் சாந்தாமணி ஆகிய 16 பேர் ரூ. 10 வீதம் 160—00

புரசை மே. தாசில் குயப்பேட்டை இராமசாமி, அயன்புரம் சி. ஆதிகேசவலு, புரசை ஏ. கிருட்டிணன், ஒட்டேரி நா. இராமலிங்கம், சென்னை—12. எஸ். துரைக்கண்ணு ஆகிய 6 பேர் ரூ. 9 வீதம். 54-00

ஓட்டுநர் (4584) பி. வீரராகவன், அம்பேத்கார்நகர் ஆர். கோவிந்தராஜ், கோவை எஸ். வி. பழனியப்பன் ஆகிய 3 பேர் ரூ. 9 வீதம் 27—00

திருவான்மியூர் ஏ. வேணு, எஸ். பாபு, நத்தம்பாக்கம் ம்க. கணேசன், எழும்பூர் ஏ. பஞ்சரத்தினம், மகாபலிபுரம் ஜி. நடராசன், இராயப்பேட்டை ஜி. எத்திராஜ், சேலம் செவ்வாப்பேட்டை எம். எஸ். நாராயணன், திருவான்மியூர் கே. சுப்பிரமணியன், நந்தம்பாக்கம் பி. திருமால்பாண்டியன், அண்ணாசாலை வி. பொன்னுசாமி, தாமஸ் மவுண்ட் ஜே.ஏ. தாஸ். சாஸ்திரிநகர் டி. திருவேங்கடம், லட்சுமிபுரம் எஸ். கண்ணுசாமி, இந்திராநகர் ஆர்.டி. சண்முகநாதன், வண்ணை பி. ராஜாராம், ஆகிய 15 பேர் ரூ. 8 வீதம் 120—00

ஆற்காடு ரோடு கே. கோபிகண்ணன், முகவை கே. கோவிந்தன். சென்னை சு.கோவிந்தன், யானைகவுனி சி கோதண்டபாணி, இளையான்குடி ஏ. சையத், அலாவுதீன், திருச்சி வேப்பூர் சி. முத்துராமன் ஆகிய 6 பேர் ரூ. 7 வீதம் 42—00

திருச்சி வேட்பூர் சி. இராமலிங்கம், ஆந்திரம்அந்தோணி கே. சுப்பிரமணியம், திருச்சி ஜே. சரசு, காஞ்சி வி. சண்முகம், சென்னை — 5 எம்.விசுவநாதன், வாலாசாபேட்டை கே. பக்ருதீன், சென்னை கே. சுதர்சனம் ராம் ஆகிய 7 பேர் ரூ 6 வீதம் 42—00

தென்கரை எஸ். இராமநாதன், அகரம் பி. மோகனு, எல். பத்மா, விசயமங்கலம் வி. இராமசாமி கே. சாமியப்பன், ஏ. அப்புக்குட்டி, கே. ரங்கசாமி, ஈரோடு கே. சி, பழனிசாமி, விசயமங்கலம் குமாரசாமி, எம். நல்லசாமி, சி. ஆறுமுகம், ஆர். கே. சுப்பிரமணியன், கே. நாச்சிமுத்து புதுகை எம். கருப்பையா, மயிலை எம். இராமசாமி, சாரதாபுரம் ஈ. குப்பன், வந்தவாசி வி. இராஜாராம், மயிலை என். ஆதிலட்சுமி, என். இராசகோபால் ஆகியோர் மூலம் 100—99

சென்னை—33 கே. தனகோடி (5.05), வ. ஆ. எம் சுப்பிரமணி (5.01). சேலம் ஏ. அன்பழகன். டி. பச்சியப்பன், கே. சிங்காரம், பி. சடையன். சென்னை-21 சூரியகுமாரி வியாசர்பாடி என். தரனேந்திரன், தெ. ஆ. ஆ. திருவேங்கடம், அலமேலு கிருட்டிணன், விழுப்புரம் முத்துசாமிபக்தர், எஸ். சுப்பராயன், ஆர்.அரங்கசாமி, திருவல்லிக்கேணி எ.ஆர். மருதவீரப்பன் ஈ. கே. ஜனார்த்தனன், கே. சொக்கலிங்கம், திருப்பத்தூர் என்.கணேசன். சென்னை-14 எ.பத்மராஜ், பாலசுந்தரம், பிள்ளையார் கோவில் தெரு சிரணி சண்முகம், சென்னை-57 எம். கே. இராமையா, கத்திவாக்கம் ஜ. வி. கோபால், அசோக் லேலண்ட், டி. என். தேவன், பாடி பி. பலராமன். கொளத்தூர் ஆர். சஞ்சீவி, ஆவடி ஏ. பி. இராமநாதன், பட்டாபிராம் கடைவீதி என். எஸ். மணி ஜி. பழனிவேல், சென்னை—55 கே. மூர்த்தி, பட்டாபிராம் கே பி. இஸ்மாயில், பி. இராசு, ஆவடி ஓ. எம் ஏ, இரசாக், பழந்தண்டலம், கே. வரதன், பல்லாவரம் எம். கோபால், ஒட்டேரி ஏ. ஆனந்தன், திருவள்ளூர் வி. குருநாதன், இஸ்லாம்பேட்டை வி. ஏ. காஜா மொய்தீன், கோவளம் சம்சுதீன், வ. ஆ. சகாதேவன், தெ. ஆ. ஈ. வடிவேலு, சென்னை-1 பி, பீர். முகமது, செனாய் நகர் பி. சி, இராமதாஸ், சென்னை—1. ஏ, மகாலிங்கம். ஏ. என், ரங்கசாமி, விழுப்புரம் வி. ஆர் முத்துகிருட்டிணன். பாண்டிச்சேரி சுந்தரமோகன், வெங்கட்ட நகர் பி. டி. அன்பரசன், எம். ஜி. ரோடு தமிழ்த்தம்பி. பாண்டி தொல்காப்பியன் ஆகிய 50 பேர் ரூ. 5 வீதம் 250 00

திருச்சி கு. ச. நெடுமாறன், பவானி சின்னமன், ஏ. கண்ணுசாமி, ஈரோடு எம். ஐ. முபாரக் அலி, சூரம்பட்டிசாலை சிவா, குமாரபாளையம் ஜி. கே. பழனிசாமி, பழனிபுரம் பி, எஸ். பாலன், பவானி எம். இராசேந்திரன் நாயர், கோவை கே. எம். வேலாயுதம், அ, கந்தசாமி, திருச்சி என். சம்பத், வி. கணேசன், கரூர் பி. பாண்டியன், நீலகிரி க. அங்கமுத்து, மேக்கூர் எஸ் கன்னியப்பன், கிணத்துக்கடவு கே. குப்புசாமி, காளிமுத்து, கே. மணியன், செங்கை இரா கலியபெருமாள், முகவை இரா. முத்திருளப்பன், கா. ஆதிமூலம். நெல்லை அ. சங்கரன், முகவை ந. சங்கரநாராயணன், சென்னை-14 எஸ். சண்முகம், கிருஷ்ணம்பேட்டை பழனி, செங்கை டி. தசரதன், அடையாறு ஏ. தியாகராசன், சென்னை ஏ. அப்புசாமி, ஏ. அப்துல் அஜீஸ், என். முனுசாமி, செங்கை பி. இராசு, இராயப்பேட்டை வி. ஆறுமுகம். நாவலூர் கே. முருகேசன், திருவான்மியூர் பி. கோபால்சாமி. வி. திருநாவுக்கரசு, முகவை எஸ். ஆர். தர்மம், மண்டபம் டோமினிக், பி. மகாலிங்கம், ரெ. செல்லப்பா, வெள்ளைப்பாண்டி. ஆ, ஞானகுரு, எஸ். என். மஞ்சன், மதுரை ஏ. ரங்கசாமி. எஸ், அண்ணாமலை, கோவை ஜே. ஏ. சார்லஸ், கோவை மா. சி. வரதாாசன், என், ஆறுமுகம், கே. பாண்டு, சா. அருமைநாதன், டி. இரமேஷ் பாபு ஆகிய 50 பேர் ரூ. 5 —வீதம் 250 00

சென்னை-7 பெருமாள்பேட்டை சாரங்கன் 9 00

குடந்தை இரா. பன்னீர். திருத்தணி எஸ். ரங்கநாதன். செங்கை ஆ. வ. இராசேந்திரன், காரமடை கே. எம். ஆர். மணி, கோவை வி. டி. பெருமாள் தேவர், எம். சி. மயில்சாமி, என் எம் பெரியமாயுலி வி கே. நாகூர் வி. டி கிருஷ்ணசாமி தேவர். தென்காசி பா. முத்தையா. நெல்லை மு. பி தனுஷ்கோடி' தூத்துக்குடி மு. வே, சுப்பிரமணி, ஜி. கே பெருமாள், சா. லிங்கசாமி, மதுரை ஈ. அங்கு, முகவை புலவர் அ தமிழ்ச் செல்வன், வை. சுப்பிரமணியன். பு. காளிமுத்து, இ. சேது, சேலம் வெ. இராமசாமி, ஏ. முகமது அலி, டி வேலுசாமி, எஸ். நீதிமாணிக்கம், ஆர் பெரியசாமி எம். குணசேகரன், ஆர், அரங்கசாமி, ந, நடராசன் வ ஆ திருப்பத்தூர் இந்துமதி ஆட்டோமொபைல்ஸ் எ சாமிநாதன், சாமிக்கண்ணு, வி சந்திரன், கோவை பத்மநாபன், வி எஸ் செல்வம் வி கோவிந்தராசு, இரா. சேகரன். கந்தசாமி. பி டி சுப்பையன், ஈ என் வெள்ளிங்கிரி கே முருகேசன் சேலம் கே நடராசன். பி நடேசன், என் பி பெருமாள், தர்மபுரி என், கோவிந்த சாமி. வே. தேவராசன், தொ. சின்னசாமி, எம். என். முனுசாமி, தண்டராம்பட்டு ஆர். பாலாஜி ஆர். சக்கரவத்தி, பி. கே கோவிந்தசாமி. காரமடை பொன்னுசாமி கோவை கீ. ஈஸ்வரன், ஆகிய 49 பேர் ரூ. 5 வீதம் 245—00

வ, ஆ. எஸ். குப்புசாமி கே, பிச்சாண்டி, கே. மல்லிகா, கே. வனிதாமணி. பி, இராணி திருவண்ணாமலை ஈ. பச்சியப்பன், டி. கே. பிச்சன், வ. ஆ. பா. விசயா வேலூர் மு, நடராசன். என். ருக்மணி நடராசன், கலையரசி, நடராசன். வ. ஆ, எஸ்.மாணிக்கம், ஆர். மணி, இராதா நடராசன், காந்திமதி, இராதாகிருஷ்ணன், தருமபுரி ஆர். முருகன், பி. சுந்தரம், கே. ஜெயச்சந்திரன், எஸ். பழனி, ஆர். சின்னசாமி, அனகாபுத்தூர் எம் வரதன்' மணச்சநல்லூர் கண்ணன், வியாசர்பாடி வி, கே. சுப்பிரமணி, வ. பொன்னுசாமி' பொ. சுகுமார், எம். சீனிவாசன்' சொ. சந்திரன், கோடம்பாக்கம். எஸ். அலாவுதீன், கோ. ந. நடராரன், நா முனியாண்டி.

(9-ம் பக்கம் பார்க்க)

அன்னக் கிளியும் அட்வகேட் ஜெனரலும்!

மருத்துவக் கல்லூரியில் இடம்பெறுவதற்காக, நேர் முகப்பேட்டிக்குச்செல்லும் ஒரு மாணவரிடம் என்னென்ன கேள்விகள் கேட்கப்படும் என்று எதிர்பார்க்கிறீர்கள்—

மருத்துவப் பட்டம் பெற நீ விரும்புவதன் நோக்கம் என்ன?

கிராமத்திற்குச் சென்று மருத்துவப்பணி செய்வாயா?

மருத்துவத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் எது?

கியூரி அம்மையார் மருத்துவத் துறையில் புரிந்த சாதனை என்ன?

—இதுபோன்ற கேள்விகள்தான கேட்கப்படும் என்று யாராவது எதிர்பார்த்தால்; அது தவறு!

வி. சௌந்தரராசன் என்ற மாணவனிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று இதோ;

"அண்மையில் வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களில் நீங்கள் விரும்பும் படம் எது?"

அதற்கு மாணவர் அளித்த பதில்:

"நான் அதிகம் விரும்பிய படம் அன்னக்கிளி..." என்பது.

இந்தக் கேள்வி கேட்கப்பட்டது சரிதான் என்று அட்வகேட் ஜெனரல் (வி. பி. இராமன், அடித்துப் பேசியுள்ளார்.

அதுமட்டுமல்ல,

'அன்னக்கிளி' படம் பார்ப்பது கூட சமுதாயப் பணிகளோடு தொடர்பு உடையதுதானும்?

இனி அடுத்துகீழ்க்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை:

எம். ஜி. ஆருடன் முதலில் கதா நாயகியாக நடித்த நடிகை யார்?

"மெதுவா மெதுவாத் தொடலாமா?"

உன்மேனியில் என் கை படலாமா? இந்தப் பாடல் எந்தப் படத்தில்வருகிறது?

ராதா சலூஜாவின்மகிமைகளைப்பற்றிச்சில வரிகளில் கூறு...?

★

★★★★★★★★★★★

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★★★★★★★★★

கூடிக் கலையப் போவதில்லை!

திருச்சி மாவட்டம் திருத்தவத்துறை (லால்குடி)யில் 1953 – ஆம் ஆண்டு நடைபெற்ற தி. மு. க. மாவட்ட மாநாட்டில் இன்றைய துணைப்பொதுச்செயலாளர் பேசுகிறார்:

“நாம் கூடுகிறோம்! கலைகிறோம்! கூடுகிறோம்; கலைகிறோம்! அடுத்த அடி எடுத்து வைக்கிறோமா? இல்லையே, என்ன பயன்?”

(முதல்நாள் இரவு நாடகம் தொடங்கும்போது சலசலப்பு சிறிது அசம்பாவிதம்.)

அப்போது அண்ணா சொல்லுகிறார்:

“ஆசைத்தம்பி அங்கலாய்த்துக் கொள்ளுகிறார்; அவருக்குச் சொல்லுவேன்: நாம் கூடத்தான் கற்றிருக்கிறோமே ஒழிய, சரியாகக் கலையக்கூட இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

“முதலில் அதனைக் கற்றுக்கொள்ளுவோம்”

அண்ணன் விரும்பியது போல இப்பொழுது நாம் குடும்பப்பாசத்தோடு கூடவும் கற்றுக் கொண்டிருக்கிறோம்: கடமையுணர்வோடு கலையவும் கற்றுக் கொண்டிருக்கிறோம்!

14–10–78 சனிக்கிழமையன்று நமது தலைமைச் செயற்குழு சென்னையிலே கூடிற்று. கூடிய செயற்குழு நல்ல பல தீர்மானங்களை நிறைவேற்றி நாட்டிற்குத் தந்திருக்கிறது. எந்தத் தீர்மானம் அவற்றில் தலைமையிடம் வகிக்கிறது எனக் கேட்டால் அவரவர்கள் எண்ணப் போக்கிற்கேற்றாற் போல் அது அமையக்கூடும்!

‘வீரேந்திர பட்டீலை தி. மு. கழகம் ஆதரிக்கிறது’ என நாம் போட்ட தீர்மானந்தான் மதுரை நெடுமாறனின் கண்களை உறுத்தியிருக்கக்கூடும். தீர்மானத்தின் வாசகங்களை முழுவதாகக் கூடப் படித்திருக்கமாட்டார். முன்னதாகவே, தாம் தயாரித்து வைத்திருந்த அறிக்கையினைப் பத்திரிகைகளுக்குத் தந்திருக்கிறார்.

ஜனநாயகம் தொடர்ந்து காப்பாற்றப்படவேண்டுமென்ற இலட்சியத்திற்காக

என முரசொலியில் கொட்டை எழுத்தில் போட்டுக் கோடிட்டுக்காட்டியிருக்கிறோமே அதைகூடப் பாராமல் அவசர அவசரமாக ஓர் அறிக்கையினைத் தருகிறார்.

செயற்குழு கூடுவதற்கு முதல் நாள் பத்திரிகை நிருபர்கள் கழகத்தலைவர் டாக்டர் கலைஞரைச் சந்தித்துக் கேட்டபோதுகூட சிக்மகளூர் இடைத்தேர்தலைப் பற்றிக் கழகம் அதிக அக்கறைகாட்டவில்லை,’ என்ற பதிலைத் தந்திருப்பதை யாரும் மறந்திருக்க

கோ இளங்கோவன்

பி. ஏ. பி.டி. எம்.எல்.ஏ.

முடியாது. அறிக்கை விடுவதாலேயே அரசியல் தலைவராகிவிடலாம் என்ற நப்பாசை கொண்டவர்கள் அதனையெல்லாம் கருத்திற் கொள்ளமாட்டார்கள்.

15–10–78 ஞாயிறு (சென்னைப்பதிப்பு) முரசொலியின் முதற் பக்கத்தைப் பார்த்தாலே தெரியும்!

ஃ சர்வாதிகாரமான மதுவிலக்கு அவசரச் சட்டத்தையும், ஆளும்கட்சி அத்துமீறல்களையும் நாடெங்கும் விளக்குவோம்!

ஃ மூன்றாவது ஊதியக்குழு பரிந்துரைகளை தமிழக அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும்!

ஃ மாநில சுயாட்சி பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களோடு மத்திய அரசு கலந்துரையாட வேண்டும்!

ஃ பெரும்பான்மையான பலத்தை இழந்த புதுவை அரசு விரைவில் பதவி விலகவேண்டும்!

ஃ ஆளுங்கட்சியின் அராஜகங்களுக்கு எதிராக மக்கள் சக்தி திரட்டப்படும்!

மற்றும்.

“தமிழக மக்களின் இதய உணர்வை வெளிப்படுத்த திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநில மாநாடு!” என்ற அறிவிப்பையும் காணலாம். அண்ணன் ஆசைத்தம்பி அவர்கள் அன்று விரும்பியதுபோலடிசம்பரில் திருச்சியில் நாம் கூடிக் கலையப்போவதில்:

குட்டக் குட்டக் குனிந்தால் குட்டுபவனும் முட்டாள்; குனிபவனும் முட்டாள் என்றொரு பழமொழியுண்டு. அதுபோல், மொழியுணர்வற்ற ஒருவர் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ குட்டியது போதாதென மத்தியிலே இருப்போர் மாநிலத்திலிருப்போரைமேலும் மேலும் குட்டிக்கொண்டிருக்கிறார்கள். ‘தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பிசண்டப் பிரசண்டன்’ என்பது போல மொரார்ஜியும் பிறரும் சண்டப் பிரசண்டர்களாக ஆகாமலிருக்கத் தட்டிக்கேட்டாகவேண்டும். தட்டிக்கேட்க நம்மைவிட்டால் வேறு நாதியில்லை! நாம் இதனைச்சொல்லுகின்றபோது, நடிகர் இராமச்சந்திரனைச் சார்ந்தவர்கள், ‘மொழிப் பிரச்சினைக்காக நாங்கள் முதல் அமைச்சர்கள் மாநாட்டினைக் கூட்டவில்லையா?’ எனக்கேட்கக்கூடும்! விளைவுகளை வைத்துத்தான் வினைகளை மதிப்பிட முடியும். முதலமைச்சர்கள் மாநாட்டால்விளைந்ததென்ன? குறிப்பிட்டுச் சொல்லவோ கோடிட்டுக் காட்டவோ முடியுமா?

எனவே, முதலமைச்சர்கள் மாநாட்டினைக் கூட்டினேன் எனச் சொல்லித் தட்டிக்கழிப்பதில் அர்த்தமிருக்க முடியாது. இவற்றையெல்லாம் எடுத்துரைக்கக்கூடிய வகையில்தான் திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநில மாநாடு!

“லம்பாடி லம்பாடி
லட்பாடிப் பேய்!

நாய் குரைத்த ஓசையிலே
பிறந்த பாடை’

கொம்பொன்று போடாமல்
தொங்க வொண்ணாக்

குரங்கெழுத்தைக்கொண்ட
மொழி ‘ஹைஹை’ என்று

நம் நாட்டில் குதிரைகளை
ஓட்டும் சொல்லை

நலுங்காமல் எடுத்துப்போய்
வினைச்சொல் லாக்கித்

தெம்போடு வாழ்வதற்கு
மேலு வார்த்தை

தேடியவா ரலைகின்ற
தெருப்பொறுக்கி!”

எனப் பாடியவர்களெல்லாம் இனி வாய்திறக்கப் போவதில்லை!

‘திராவிட நாடு திராவிடருக்கே!’ என்ற பிரச்சினையைக் கைவிட்ட அண்ணா அன்றைய தினம் ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற பெயரினைக் கைவிட விரும்பவில்லை. தொடர்ந்து இருக்கவேண்டுமென்றே அவரது தூய நெஞ்சம் விரும்பியது. இதனைக்கூட எண்ணிப்பார்க்க இயலாதவர்கள் எண்ணிப் பார்த்தாலும் எடுத்துச்சொல்லும் நெஞ்சுரம் அற்றவர்கள் ‘அ. இ. அ. தி. மு. க.’ எனத் தங்கள் கட்சியின் பெயரைமாற்றிக்கொண்டார்கள். மொழிப்பிரச்சினையைப் பொறுத்தவரை ‘தி. மு. கழகமும் அ. இ. அ. தி. மு.க.வும் இரட்டைக்குழல் துப்பாக்கிதான்;’ எனச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் முழங்கினாலும் நாடு நம்பத் தயாராயில்லை!

மாநில சுயாட்சிக்கொள்கையில்மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒத்து நின்று உரத்தக் குரல் எழுப்பினாலும் மொழிப்பிரச்சினையில் முழுக்க நம்பக்கம் நிற்க மாட்டார்கள்!

கடந்தகால வரலாறு காங்கிரஸ்—ஜனதா நிலையினை உணர்த்தும்—எனவே, இந்தித் திணிப்பினை எதிர்ப்பதற்கு முன்னேற்றக்கழகம்தான் முழுமூச்சோடுபாடுபட்டாகவேண்டும்.

“செந்தமிழா இன்பத்திராவிடா, தென்னகத்தில் இந்தி வருமானால் என்னசெய்வாய்?” எனக் கேட்டால்,

“— முந்தியென் மூதாதை ‘நடராசன் தாளமுத்து’ சென்றிட்ட பாதையில் செல்லுவேன் பார்!”

எனப் பறை சாற்றுவதோடு இளந்தலைமுறையினருக்கு இந்தி எதிர்ப்பு வரலாற்றினை முறையாக எடுத்துரைக்க முன்னேற்றக் கழகம் கடமைப்பட்டிருக்கிறது.

நிதி அனுப்பியோர் விவரம்.

(8-பக்கத் தொடர்ச்சி)

சென்னை - 93 ஆர். கோதண்டபாணி, நா பரமசிவன், செங்கை வி. மலராமன், அசோக் நகர் தா. மாரியப்பன், ஆர் சந்திரா, சென்னை—19 எம். சீத்தாபதி தி நகர் ஈ. சபாபதி, கே. பார்த்தசாரதி, ஆ. தேவராசு, மு; தானப்பன், டி. ஆதிகேசவன், எம். ஏ. முனகதீன் பிச்சை, கோ. முன்னேற்றம்’ கலாவதி வாசுதேவன், பெ சி அரிவரசன். பெ, சு அன்பரசு. இரா முருகேசன் ஆர். இராகவன். அயனாவரம் அண்ணா நினைவு மன்றம். சென்னை —38— வி, இராசர்மணி ஆகிய 50 பேர் ரூ. 5 வீதம் 250—00

பம்பாய்— 19 எம். உல், கேம்ப். நெல்லை அமல்ராஜ், சென்னை - 18 வி, இராமகிருஷ்ணன் சென்னை—13 ஆறுமுகம், வில்லிவாக்கம் பி ராம்ராஜ், அயனாவரம் மலர்வண்ணன் ஐ. சி. எப், எஸ், சிட்டிபாபு பத்மநாபன் ஆர், பாலகிருஷ்ணன் அம்பத்தூர் எல், கண்ணையன், தென்காசி, வி. துரைராஜ், முகவை. டி, ரத்தினம், ஏ. முஸ்தாபா கரீம், சி. லவரஞ்சிபர்ஞந்த், வி. ஆர். தேசு அலங்காரம். எம். ஆனந்தன். வெ. சண்முகம், ஆர், முருகேசன். சென்னை—42 சரோஜா கணேசன், சென்னை— 5 ஆர். பத்மினி, சென்னை — எஸ். எஸ் இராதாகிருஷ்ணன் புதுப்பேட்டை தா ஜெயராமன். தேவேந்திரன், இராயபுரம் கோ. சந்திரா சென்னை—2 ஏ நாராயணசாது மயிலை பி.சங்கரன் சேலம்—4 ரா தங்கவேல் சென்னை-4 ஆர். காளி, சு. ஆறுமுகம், ஜி. கோவிந்தசாமி, மணவாளன், சா. கார்த்திகேயன், என். ஜெயராமன், மந்தவெளி அரு. பிரேம்குமார், தஞ்சைசீனிவாசன் வியாசர்பாடி த. சம்பந்தம் ஏழுமலை, ஆர். கணேசன், இரத்தினசிங், சி சண்முகம், செங்கை எஸ். உமா செல்வி எஸ். சண்முகசுந்தரம், வியாசர்பாடி, கே. கொட்டையன், கே. கலைவாணி, எஸ். கணேசன், சூளைமேடு முனியாண்டி, வியாசர்பாடி பி. குப்புசாமி, செங்கை ஜி. தாமஸ்: பொன்னேரி குணசேகரன் திருவல்லிக்கேணி முருகேசன், சத்தியமூர்த்தி நகர் சுதணுபால் தரனேந்திரன் ஆகிய 50 பேர் ரூ. 5 வீதம் 250 - 00

சென்னை—13 ஆர். நடராசன்; ஏ. முஸ்தாபா பேக் சேத்துபட்டு ஜி. சுப்பிரமணியம் பாடி எப். டி. இரத்தினம், பி. வி. இன்பநதி, அம்பத்தூர் நா: தமிழரசி திருப்பத்தூர் நா. சொர்ணமணி திருச்சி—2 கோவிந்தராசன் மணப்பாறை கே பிச்சை கே. ஆறுமுகம் லப்பைக்குடிக்காடு எஸ். கலைச்செல்வன் சிங்குளம் கர்லனி சி. சிவம், சிவம். பாலமுருகன் பிரகாசம் எம். கருணாநிதி கருப்பையா அம்மாள்

மொத்தம் ரூ. 80,141—25

ஆடுகளைப் பார்த்து அழுகிறது ஓநாய்!

‘இந்தியமக்கள் இன்னும் சிரமப்படுவதைக் கண்டு நான் வருந்தப்படுகிறேன். எவ்வளவோ திட்டங்கள் தீட்டப்பட்டுவிட்டன. ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்—சுதந்திரம் பெறுவதற்கு முன் இருந்ததைவிட வறுமை அதிகமாகியிருக்கிறது...”

— ஏழை இந்திய மக்களைப்பார்த்து இவ்வாறு ‘கண்ணீர்’ சிந்துவது யாரென்று தெரியுமா? இந்தியாவின் மிகப்பெரும் பணமுதலையான பிர்லாதான்’

இந்தியாவின் பொருளாதாரத்தையே தன் ‘சட்டைப்பைக்குள்’ வைத்திருக்கும் பிர்லா போன்றோரின் சுரண்டலால்தானே இந்திய மக்கள் ‘ஓட்டாண்டி’ ஆனார்கள்.

ஆயிரத்து இருநூறு கோடிக்குமேல் சொத்துச்சேர்த்திருக்கும் இந்தப் பணத் திமிங்கலத்தின் உண்மையான வருத்தம் எதுவென்றால் —

இந்தியாவை முழுக்க முழுக்கத் தானும் தன் சகாக்களுமே சுரண்ட முடியாமல். அந்நிய நாட்டு முதலாளிகளும் சேர்ந்து சுரண்டுகிறார்களே என்பதுதான்!

இந்திய முதலாளிகளுக்கு ஜனதா அரசு கட்டுப்பாடு விதிக்கிறது என்று சொல்லி ‘மூக்காலும் அழும்’ பிர்லா போன்றோரின் ஆசையெல்லாம் இந்திய மக்களை முழுக்க முழுக்கத் தாங்களே சுரண்டவேண்டும் என்பதுதான்!

கலைஞர் முன் வெல்லுமோ கவர்ச்சி அழகு?

அழகுக்கு ஆட்சி தரும் அவலநிலை இன்று தமிழகத்தில் தலைவிரித்தாடுகின்றது. காட்சிப் பொருட்களைக் கொண்டு கல்வி கற்பிக்கும் நிலைபோய்; காட்சியே கல்வி எனும் அவலநிலை மண்டிக் கிடக்கின்றது. ஆட்சிக்குரியவர் இத்தன்மையினராய் இருத்தல் வேண்டும் என்று வள்ளுவர் போன்ற மேதைகள் வடித்துத் தந்த கருத்துக்கள் மடித்து வைக்கப்பட்டு, நடிப்பில் சிறந்தவராய் இல்லாவிடினும், நயன விருந்தளிக்கும் நாயகனே நாடாளத்தக்கவன் என நாடு நம்பும் கேட்டினைக் காணும்போது. அன்னைத் தமிழ்ப் புலவா அவ்வைப் பிராட்டியார் இன்றில்லையே என்றெண்ணி வருந்த வேண்டியுள்ளது. அவரில்லை என்றாலும் அவர் தொண்டைமானின் செருக்கொழித்த செந்தமிழ்ப் பாடல் அழிந்துபடவில்லையே!

அன்னைத் தமிழ்க் கவிஞர்களை, அருந்தமிழ்ப் புலவர்களை அரவணைத்துக் காக்கும் பணியில் அல்லும் பகலும், அமிழ்ந்திருந்த் அதிகமான், தன்னை அழிக்கத் திட்டமிட்டுப் பணியாற்றி வந்த தொண்டைமானை கவனிக்க மறந்தான். மண்ணாசையினனான தொண்டைமானோ நாளும் படைச்கலன்களைத் திரட்டும் பணியிலும். நன்றி கொல்லும் நடைப்பிணங்களை சேர்க்கும் பணியிலும் ஈடுபட்டுவந்தான். அப்பப்பா! அவன் பாசறையில்தான் எத்தனை, எத்தனைப் படைக்கலன்கள் எழிலாக வடித்து வைத்திருந்தான்! அத்தனையும் பகைமுகங்காணாப் புத்தம் புதுக்கலன்கள். மெருகு குலையாமல் அழகாக அடுக்கி வைத்திருந்தான். அதனைக் கண்ணுற்ற அதிகமானின் உடனிருந்தே குழிபறிக்கும் கூலிப் படைகள் கும்மாளமிட்டன அதிகமான் அழிந்துவிட்டான் என்றே ஆர்ப்பரித்தன! ஏனெனில் அதிகமானின் பாசறையில் படைக்கலன்கள் முனை மழுங்கியும், குருதிக் கறைப் படிந்தும் கொல்லனது உலைக்கூடத்தில் குவியலாகக் கிடந்தன. அப்பொழுதுதான் அவன் ஒரு பெரும் போரில் ஈடுபட்டு அதை முடித்து அருந் தமிழ்ப் புலவர்கள் புகழ மழையில் நனைந்து இன்புற்றிருந்தான். மற்றொரு போர் வருமென்று எண்ணவில்லை. இதுதான் தக்க சமயமென்று தொண்டைமானுக்குத் தூது அனுப்பிக் கொண்டிருந்தன "துரோக உருவங்கள்''

நியாயமான போரில்நின்று போரிட இயலாத தொண்டைமானோ, "துரோகிகள் தூது'' பெற்றதும் தொடை தட்டினான் போருக்கு அழைப்பு விடுத்து வீரத்தின் விளை நிலமான அதிகமானை விளைவைக் குறித்து அஞ்சுவான். துணிந்து எழுந்து விட்டான் துரோகப் போரைத் தூள்தூளாக்க!

அருகிலிருந்த அவ்வைக்கு உண்மை நிலை புரிந்தது. அதிகமானின் வீரம் அவர் அறியாததல்ல ஆனால் அவ்வேளை அதிகமான் போரிடத் தக்கதன்றிருந்தார். எவ்விதமேனும் போர் நிகழா வண்ணம் தடுத்திட விழைந்தது தமிழ் உள்ளம். எண்ணியதை வண்ணமுறச் செயலாற்ற மன்னன் தொண்டைமான் அரண்மனைக்குச் சென்றாள். வந்தவர் வையம் புகழ் வண்டமிழ்ப் பெண்பால் புலவராயிற்றே! வாயாறப் புகழ்ந்து வரவேற்றான், வந்தவரின் நோக்கமும் அறிவானாதலால் அவ்வைக்குத் தன் வன்மையைக் காட்டிடத் தன் புன்மை உள்ளம் துடித்தது அவரைப் பாசறைக்கு அழைத்துச் சென்று படைக் கலன்களின் பளபளப்பைக் காட்டினான். இது போதாதா அவ்வைக்கு இடித்துரைத்து எடுத்துரைக்க!

இதோ இயம்புகிறாள் கேளுங்கள்:

"இவ்வே; பீலி யணிந்து
மாலைசூட்டிக்,
கண்டிரணோன்காழ்திருத்தி
நெய்யணிந்து
கடியுடை வியனகரவ்வே,
டவ்வே,
பகைவர்க் குத்திக்
கோடு துதி சிதைந்து
கொற்றுரைக்
குற்றில மாதோ,''

இங்குள்ள படைக்கலன்கள், பீலி அணியப்பட்டு மாலை சூடப்பட்ட உடலிடந்திரண்ட வலிய காம்பை அழகு படச் செய்யப்பட்டு, நெய்யிடப்பட்டு, காவலையுடையகோயிலடத்தன (அங்குள்ள) அவைதாம் பகைவரைக் குத்துதலாற் கங்கும், நுனியும் முரிந்து கொல்லனது உலைக் கூடத்தில் உள்ளன.

தோப்பூர் திருவேங்கடம் எம். ஏ.

என்று அவனைப் புகழ்வது போன்று இகழ்ந்துரைத்தார். இவ்விதமே கவர்ச்சியழகை மாடலன் மதுரைக் குமரனாரும் புறநானூற்றில் இகழ்ந்துரைக்கிறார். விழுப்புண்கள் ஏற்றதால் அழகற்றதெனஅறியாமையால் ஒதுக்குவோர்க்கும் எது அழகென்று இடிந்துரைக்கிறார். ஏனாதி திருக்கிள்ளியை நோக்கிப் புலவர் மதுரைக் குமரனார் குறிப்பிடுவது நம் சிந்தனைக்குவிருந்துபடைப்பதாகும்.

"போர்ப் புண்பட்ட நீ கண்ணுக்கு இன்னாதவாயினும் உன் பேராற்றலை மற்றவர்களும், மாற்றார்களும் கூறக் கேட்பதற்கு இனியனவாம், உன் பகைவரோ உன்னைக் கண்டதும் புறங்காட்டி ஓடினரவாதலால், அவர்தம் புறத்தோற்றத்தால் கண்ணுக்கு இனியர்; கேள்விக்கு இனியரல்லர் வீரக் கழல் புனைந்த கிள்ளியே நீயும் ஒன்றிலே இனியன். நின்பகைவரும் ஒன்றிலே இனியர்; இருப்பினும் உன்னை மட்டும் இவ்வுலகம் மதிக்கிறதே அதற்குக் காரணம் யாது? எமக்குச் சொல்வாயாக, என்று வினவுகிறார் புலவர். இக்கருத்தமைந்த பாடலாவது.

"நீயோ அமர்காணின்
அமர்கடந்து அவர்
படைவிலக்கி எதிர்
நின்றலின்
வா அள்வாய்த்த வடுவாழ்
யாக்கையொரு
கேள்விக்கு இனியை;
கட்கு இன்னாயே!
அவரே நிற்காணின்,
புறங்கொடுத்தலின் ...
என்னோ பெரும்
உரைத்திசின் எமக்கே...''

என்ற புகழோவியத்தைப் படிக்கின்றவர்கள் கவர்ச்சியழகை விடுத்துக் கலைஞரின் கலையழகில், ஆற்றல் அழகில், சொல்லழகில், செயலழகில், சொக்கி நிற்பர். அவர் அரிதாரம்பூசாததால் கண்களுக்கு இனியவரல்லாதவராக இருக்கலாம். ஆனால் அவர் ஏற்ற விழுப்புண் அழகிற்குக்கவர்ச்சியழகர்கள் இணையாகார் என்பது மட்டும் உறுதி!

ஒருவர்பார்வைக்கு இனியவராகவும், கவர்ச்சியுள்ளவராக இருத்தலைவிட கேள்விக்கு இனியவராக இருப்பது சாலச் சிறந்தது என்பது புலவரின் கூற்றாகும். வள்ளுவப் பெருந்தகையும் கேள்விச் செல்வத்தின் இன்றியமையாமையைக் 'கேள்வி' என்ற அதிகாரத்தில் விளக்கியுள்ளார். கற்கவில்லையானாலும் கேள்வியின்மூலம் அறிவை வளர்ச்சி செய்துகொள்ளலாம் என்றும், செல்வங்களில் எல்லாம் தலைசிறந்த செல்வம் செவிச் செல்வம்தான் என்றும் கூறியுள்ளார்.

"கேட்பினும், கேளாத் தகையவே, கேள்வியால் தோட்கப்படாதசெவி'' என்று கூறியதன்மூலம் காதுகள் இருப்பதே கேள்விச் செல்வத்தின் இன்பத்தை அறிவதற்காகத்தான் என்று ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளார். கேட்பது என்றால் எதை வேண்டுமானாலும் கேட்பது என்று பொருளல்ல, "எனைத்தானும் நல்லவை கேட்க'' என்று எடுத்தியம்பியதின்மூலம் நல்லனவற்றைக் கேட்கும்படியாகக் கட்டளையிட்டுள்ளார். ஆம் கலைஞர் அவர்கள் பாண்டியில் அவரேற்ற விழிப்புண்ணும், பாளையங்கோட்டைச் சிறையில் இருந்திட்ட தியாக அழகும், கல்லக்குடிப் போராட்ட வெற்றிபுகழும்; இந்திஎதிப்புப் போர்களில் அவர் ஏற்றவிழுப்புண்களும், அவரை அரசியலழகராக ஆண்மை அழகராக நம் செவி குளிரக் கேட்பதற்கு நல்லனவாக உள்ளன.

நாலடியாரில் கூட கவர்ச்சியழகுகடிந்துரைக்கப்பட்டிருப்பது அனைவரும் அறிந்த தொன்றாகும்!

'குஞ்சி யழகும், கொடுந்
தானைக் கோட்டழகும்,
மஞ்சளழகும், அழகல்ல —
'நெஞ்சத்து
நல்லம் யாமென்று
நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு''

ஆகவே வெளிப்பகட்டு மூலம் அழகராக இருப்பது அறிவுடைமையன்று கலைஞர் அவர்கள் கல்வியழகும். கேள்வி யழகும் உடையவராக வ்ளங்குவதே போற்றுதற்கும், பாராட்டுதற்கும் உரியவராக விளங்குகிறார் என்பது தெள்ளிதின்புலனாகும்!

நடிக முதல்வரே--

நீதி விசாரணைக்குப் பயப்படுவது ஏன்?

கடையடைப்பு—பொது வேலைநிறுத்தத்தின் போது நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு நீதி விசாரணை வைக்க வேண்டும் என்ற எதிர்க் கட்சி தலைவர்களின் கோரிக்கையை எம். ஜி இராமச்சந்திரன் நிராகரித்துள்ளார்.

அவர் (எம். ஜி. ஆர்.) தம் மீதோ அமைச்சர்கள் மீதோ தவறு இருந்தால்தான் நீதி விசாரணை நடத்தலாம் — என்றார் கூறுகிறார்.

எம். ஜி. இராமச்சந்திரனும் அவருடைய சக அமைச்சர்களும் எரிகின்ற தீயில் எண்ணெ வார்ப்பதுபோல்-தர் கட்சிக் குண்டர்களைத் தட்டிக் கொடுத்து - வன்முறைச் சம்பவங்கள் நிகழப் பின்னணியிலிருந்து எப்படியெல்லாம் 'தூப'' போட்டார்கள் என்பதை நாடே அறியும்.

அவர்களாவது திரை மறைவிலிருந்துகொண்டு செயல்பட்டார்கள் போகட்டும்....

ஆனால்—

ஆளுங்கட்சிக் குண்டர்களும் போலீசாரும் திட்டமிட்டு வன்முறைகளைத் தூண்டிவிட்டார்களே, இதற்காகவாவது நீதிவிசாரணை வைக்க வேண்டாமா?

எம். ஜி. இராமச்சந்திரன் நீதி விசாரணைக்த ஆணையிட மறுப்பது ஏன் என்று மக்களுக்குத் தெரியாதா என்ன?

நீதி விசாரணை நடப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது—

அ.தி.மு.க குண்டர்களின் முகமூடிகள் மக்கள்முன் கிழித்துக் காட்டப்படும். போலீசார் தங்கள் கடமைகளை மறந்து ஆளுங்கட்சி உறுப்பினர்களாக எவ்வாறு செயல்பட்டார்கள் என்ற வெட்கக்கேடும் வெளிப்பட்டு விடும்!

கல்லிலிருந்தாவது ஈரம் சுரப்பதை எதிர்பார்க்கலாம்; ஆனால் எம் ஜி, இராமச்சந்திரனின் இதயத்திலிருந்து நீதியை எதிர் பார்க்க முடியாது; நீதி விசாரணையையும் எதிர்பார்க்க முடியாது'

ஊதுவோமே...வாயை ஊதுவோமே !

அண்ணா சாலையில் உள்ள ஒரு அசைவ உணவு விடுதி. இரவு பத்துமணி. ஏராள மான ஆண்களும் பெண் களும் அமர்ந்து உணவருந்திக் கொண்டு இருக்கிறார்கள். வானொலிப் பெட்டி இரைச்ச லிட்டுப் பாடிக் கொண்டிருக் கிறது. வெள்ளைச் சீருடை அணிந்த பணியாளர்கள் கைகளில் தட்டுக்கள் ஏந்திய படி எந்திரங்கள்போல் இயங் கிக் கொண்டிருக்கிறார்கள்.

திடீரென்று ஏழெட்டுப் போலீஸ்காரர்கள் கனத்த பூட்ஸ்கள் ஓசை எழுப்ப தட தடவென்று உள்ளே நுழைந்து —"யாரும் அசையக்கூடாது... எல்லோரும் அப்படியே உட் காருங்கள்..."

என்று பட்டாளத்துப் பாணியில் உரக்கக் குரலெ டுத்துக் கட்டளையிடுகிறார்கள்.

உணவருந்திக் கொண்டி ருந்தவர்கள் ஒன்றும் புரியாத வர்களாக சிலைபோல் தங்கள் இருக்கையில் அமர்ந்திருக்கி றார்கள்.

போலீஸ்காரர்கள் ஒவ் வொருவராகப் பிரிந்து, அமர்ந்திருப்பவர்களின் அரு கில் சென்று மிரட்டுகிறார்கள்:

"உம் வாயை ஊது .."
"வாயை ஊதிக் காட்டு"
"ஊது ... ஊது..."

—எல்லோரும் வாயை ஊதுகிறார்கள் ... அவமதிக்கப்

பட்ட அவர்களது முகங்கள் இருளடைகின்றன.

சிலருடைய வாயிலிருந்து மீன் வாடை வீசுகிறது; சில ருடைய வாயிலிருந்து முட்டை வாடை வீசுகிறது சிலரு டைய வாயிலிருந்து வெங்காய வாடை வீசுகிறது...

ஆனால்—

யாருடைய வாயிலிருந்தும் சாராய வாடை வீசவில்லை!

போலீஸ்காரர்கள் ஏதோ மகத்தான ஒன்றைச் சாதித்து விட்டவர்கள்போல் உணவு விடுதியிலிருந்து அகலுகி றார்கள்.

ஃ ஃ ஃ

இரவு இரண்டாவது ஆட் டம் திரைப்படம் பார்த்து விட்டு பொது மக்களில் சிலர் வந்துகொண்டிருக்கிறார்கள். நான்கைந்து போலீஸ்காரர் கள் சைக்கிளில் வந்து அவர் களை வழி மறிக்கிறார்கள்.

பழனி சித்தார்த்தன்

போலீசார் : அப்படியே நில்லுங்கடா...யாரும் அசை யக் கூடாது...

பொது மக்கள் : கொஞ் சம் மரியாதையாப் பேசிப் பழகக் கூடாதா?

போலீசார் : சரிதான்... மூடுங்கடா வாயை. பெரிய மரியாதையைக் கண்டுட்டா னுங்க...சரி...சரி...எங்கிருந்து வர்றீங்க? எங்க போறீங்க?

பொதுமக்கள்: சினிமா பார்த்துட்டு வர்ரோம்...வீட் டுக்குப் போய்க்கிட்டிருக் கோம்.

போலீசார்: சந்தேகமா யிருக்கு, உங்களைப் பார்த் தால். எல்லாரும் வாயை ஊதுங்க...

பொது மக்கள் வாயை ஊதுகிறார்கள். சில ருடைய வாயிலிருந்து புகை யிலை வாடை வீசுகிறது; சில ருடைய வாயிலிருந்து வெற் றிலை வாடை வீசுகிறது; சில ருடைய வாயிலிருந்து பீடிப் புகை வாடை வீசுகிறது. யாருடைய வாயிலிருந்தும் சாராய வாடை வீசவில்லை— போலீசார் தங்களுடைய கடமையை வெற்றிகரமாகச் செய்து விட்டவர்கள்போல் சைக்கிளில் நெஞ்சைநிமிர்த்தி ஏறி மிதிக்கிறார்கள்.

பொது மக்களில் ஒருவர்: சே, என்ன அநியாயம் இது? இருட்டுன பின்னடி வெளியே தலைகாட்ட முடியலியே.. நாட்டு மக்களையெல்லாம் திருடனுங்க; குடிகாரனுங் கன்னு நினைக்குதா இந்த ஆட்சி?...

ஃ ஃ ஃ

சென்னை மாநகரின் தி. மு. க. கோட்டை யெனக்கருதப் படும் கோடம்பாக்கம். ஒரு டீக்கடை அருகே சில தி. மு. க. தோழர்கள் நின்று டீ குடித் துக் கொண்டும் புகை பிடித் துக் கொண்டும் இருக்கிறார் கள்.

சற்று தூரம் தள்ளி—

கையில் பச்சை குத்திய அ தி. மு. க. வைச் சேர்ந்த சிலர், நான்கு போலீசாரின் காதருகே சென்று 'கிசு கிசு'க் கிறார்கள் :

"அந்த டீக்கடை கிட்ட நின்னுகிட்டு இருக்குறவனுங் கல்லாம் பழைய மேயர்— தி. மு. க. தலைமை நிலைய அலுவலகச் செயலாளரான சா கணேசனோட ஆளுங்க... அவுங்களைட்போய் 'விசா ரிங்க' ..."

—போலீசார் அவர்களை நோக்கி விரைந்து வருகிறார் கள். சண்முகம், துரை ஏழுமலை என்ற தி. மு. க. தோழர்களை பார்த்து மிரட்டுகிறார்கள்:

போலீசார்: வாயை ஊதுங்க .

தி. மு. க. தோழர்கள்: எதுக்கு ?

போலீசார்: நீங்க குடிச் சிருக்கீங்க...

தி. மு. க. தோழர்கள்: யார் சொன்னு அப்படி ?

போலீசார்: யாரும் சொல்லவேண்டியதில்ல ... எங்களுக்கே தெரியும்...

தி. மு. க. தோழர்கள்: உங்களையெல்லாம் யாரு ஏவி விடுறாங்கன்னு எங்களுக்குத் தெரியும்...வாயை ஊதுறோம் ...அவ்வளவுதானே உங்க ஆசை...

—அவர்கள் வாயை ஊது கிறார்கள், போலீசார் மூக்கை சிணுங்கிக் கொண்டுமோப்பம் பிடிக்கிறார்கள்.

யாரிடமிருந்தும் சாராய வாடை வீசவில்லை.

ஃ ஃ ஃ

இந்தியாவிடுதலை அடைந்த போது தமிழகமக்கள் மகிழ்ச்சி யோடு பாடிய ஒரு பாடலை நினைவு கூர்வோம்:

ஆடுவோமே—பள்ளுப்
பாடுவோமே
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோமென்று
ஆடுவோமே — பள்ளுப்
பாடுவோமே

அதே மக்கள் ஒரு கோமா ளியை ஆட்சி பீடத்தில் ஏற்றி வைத்ததால் மகிழ்ச்சி இழந்து மனதிற்குள் பாடும் பாடலை இப்போது கேட்போம்:

ஊதுவோமே — வாயை
ஊதுவோமே
வாத்தியாராட்சியில்
வந்ததால்அவசரச்சட்டம்
ஊதுவோமே — வாயை
ஊதுவோமே

தமிழக மக்களை அவமானப் படுத்தும் கோமாளி ஒன்றை உணரவேண்டும் -

இப்போது 'வாயை ஊதிக் கொண்டிருக்கும்' தமிழக மக் கள் தொடர்ந்து இந்த அவ மானத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாதவர்களாய்,

ஒரு நாளைக்கு —

தங்கள் சக்திகள் அனைத்தை யும் ஒன்று திரட்டி ஒரே ஊதாக ஊதத்தான் போகிறார் கள்.

அப்போது —

இந்த இராமச்சந்திரன் அவருடைய குண்டர்படை, போலீஸ் எல்லோரும் சூறைக் காற்றில் சருகுகளென இருந்த இடம் தெரியாமல் பறந்து விடுவார்கள் !

கலைஞர் கடிதம்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

சாயிகள் வண்டிப் போராட்டம் நடத்தினார்கள் —முதல்வர் பொறுப்பில் இருந்த நான் அதைப பொறுமையாக சந்தித்துக்கொள்ளுமாறு காவல் துறையினரைக் கேட்டுக்கொண்டேன்.

கடந்த மாதம் விவசாயிகளைப் பார்த்து எம். ஜி. ஆர். என்ன சொன்னார் ? வண்டி ஊர்வலம் நடத்தினால் மாடுகள் ஏலம் போடப்படும் ! வண்டிகள் நொறுக்கப்படும் ! இந்த வீர வாசகங்களை சட்டப்பேரவையிலே கூட உறுதிப்படுத் தியவரல்லவா எம். ஜி. ஆர். !

வானொலியார் நடுநிலை பிறழாது நமக்கும் வாய்ப்பளித் திருந்தால் இந்தச் செய்திகளையெல்லாம் கூறி அந்த இரட்டை மனிதரின் உருவத்தை நாட்டுக்குப் படம் பிடித் துக் காட்டியிருக்க முடியுமல்லவா ?

பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் நண்பர் சுப்பு தலைமையில் உள்ள சங்கத்திற்கும், நண்பர் ரங்கராஜன் குமாரமங்கலம் தலைமையில் உள்ள சங்கத்திற்கும் நண்பர் கோவிந்தசாமி தலைமையிலுள்ள சங்கத்திற்கும் இருந்த அங்கீகாரத்தை நேற்று (22—10—78) அவசர அவசரமாக ரத்து செய்து விட்டு, அந்தச் சங்க அலுவலகங்களின் கதவு களை உடைத்து 'ரிக்கார்டு'களையும் கைப்பற்றிச்சென்றுள்ள இந்தச் சர்வாதிகார அரசுக்குத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசத் தகுதி என்ன இருக்கிறது ?

தொழிலாளர்களுக்குப் பாடுபடும் உத்தமரைப்போல வானொலியில் நீலிக் கண்ணீர் வடிக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாக்குவதற்கே வானொலி உரையைத் தயாரித் துக்கொண்டு அறைகூவல் விடுக்கிறார் !

அவருக்கு அடிமையாக — எதிர்க்கட்சிகளுக்கு விரோத மாக — செயல்படும் வானொலி, டெலிவிஷன்கள் திருந்திக் கொள்ளப் போகின்றனவா ? அல்லது அவற்றைத் திருத்த அமைதியான முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குவ தைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையை எதிர்க்கட்சி களுக்கு உருவாக்கப் போகின்றனவா? இந்த இரண்டில் ஒன்று நமக்குத் தெரிந்தாக வேண்டும்.

அன்புள்ள,
மு. க.

நன்றி: 'முரசொலி'
(24—10—78)

தந்தை பெரியார் பற்றி 'ஸ்வீடன்' பெண்

அனிதா மீல் என்பவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த பெண்மணி தற்போது மதுரையில் இருந்தும் இவர் தந்தை பெரியார் குறித்து ஒரு ஆய்வு நூல் எழுதியுள்ளார். அதன் பெயர் : 'பெரியார் ஈ. வெ. ராமசாமி.

இந்நூலை எழுதிய அவருக்கு சுவீடனில் உள்ள 'லூஸ்டு' பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

தொலைபேசி: கடை: 33213 இல்லம் 31922
தரம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு - விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 26, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி 12, அழகர்கோவில் சாலை, 72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

M.K. TRADERS MK MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத் திக்கொண்டிருக்கும் எங்க ளது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை 28
திறமையுள்ள ஆண் — பெண் ஏஜென்டுகள் தேவை.

இரண்டில் ஒன்று!



உடன் பிறப்பே!

'மிசா' காலத்தில் எதிர்க் கட்சிகளைப் பற்றி அவதூறு பேசுவதற்கு எப்படி வானொலியும், டெலிவிஷனும் பயன் படுத்தப்பட்டனவோ, அதே போல மினிமிசா ஆட்சி நடைபெறும் தமிழ்நாட்டில் வானொலியும், டெலிவிஷனும் எம். ஜி ஆரின் உத்திரவுப்படி எதிர்க்கட்சித் தலைவர்களைப் பற்றியும், எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகள், அமைதியான கிளர்ச்சிகள் பற்றியும் அவதூறான செய்திகளை வெளியிடத் தாராளமாகப் பயன்பட்டு வருகின்றன.

மாநில அரசு என்ற முறையில் மட்டுமல்லாமல் வானொலி, டெலிவிஷன் நிலையத்தில் உள்ள பெரும் புள்ளிகள்; எம். ஜி· ஆருடன் தனியாகக் கொண்டிருக்கிற தொடர்புகளும் இந்த நிலைமைக்குக்காரணமென்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

அனைத்துக் கட்சிகளின் சார்பில் தமிழ்நாட்டில் பொது வேலை நிறுத்தமும். கடையடைப்பும் அறிவிக்கப்பட்ட பிறகு—அதற்கு எதிர்ப்பான செய்திகளுக்கே முதலிடமும், முக்கிய இடமும் அளித்து வானொலியும், டெலிவிஷனும் இயங்கி வருவதைத் தமிழ் நாட்டு மக்கள் நன்கு அறிவர்:

எதிர்க்கட்சிகளின் சார்பில் கூறப்படும் கருத்துக்களை ஓரிரு வரிகள் செய்தியாகத் தருவதும்–கூடுமான வரை இருட்டடிப்புச் செய்வதும்—இந்தக் கிளர்ச்சியின் போது வானொலியார் காட்டியுள்ள கைவரிசையாகும்.

செய்திக்கு ஒதுக்கப்படுகிற நேரம் பத்து நிமிடங்கள் என்றால் அதில் ஒன்பது நிமிடம் அரசின் சார்பான கருத்துக்களுக்கும், அரை நிமிடம் எதிர்க் கட்சிகளின் கருத்துக்கும் வழங்கித் தமது நன்றிக் கடனை வானொலி நிலையத்தில் உள்ளவர்கள், தங்களின் எஜமானர் எம். ஜி. இராமச்சந்திரனுக்குக் காட்டிக்கொண்டுள்ளனர்.

"மினிமிசா' ஆட்சி, தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதற்குத்தலையாயஎடுத்துக்காட்டாக அமைந்துள்ளதுதான், 22-ந் தேதி மாலை 6-15 மணிக்கு வானொலியில் எம். ஜி, இராமச்சந்திரன் ஆற்றிய உரையாகும்.

தி. மு. க., இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி. மார்க்சிஸ்டுக் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், இந்திய தேசியகாங்கிரஸ், ஜனதா தொழிற்சங்கஅமைப்பு, பார்வர்டு பிளாக். காந்தி காமராஜ் காங்கிரஸ். குடியரசுக் கட்சி, உழைக்கும் மக்கள் மாமன்றம் முதலிய இயக்கங்கள் இணைந்து நடத்தும் இந்த அறப்போராட்டத்தை, வானொலியும் டெலிவிஷனும் "சில எதிர்க்கட்சிகள்" என்றே குறிப்பிடுகின்றன! நாலுபேர் கொண்ட ஒரு அமைப்பு, அறப்போருக்கு எதிராக ஒரு அறிக்கை விடுத்தாலும் உடனே அந்த அறிக்கைக்கும், அந்த அமைப்புக்கும் வானொலியில் பிரமாதமான விளம்பரம் ஒரு முறையல்ல—பலமுறை—திரும்பத் திரும்ப!

என்னதான் முதலமைச்சராக இருந்தாலும், எதிர்க் கட்சிகள் நடத்தும் அறப்போரைப் பற்றி வானொலியில் அறைகூவல் விடுவதையும், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேலி பேசுவதையும் சர்க்காரியா கமிஷன், லஞ்சலாவண்யம் என்றெல்லாம் ஏகடியம் செய்வதையும், ஒருவர் தலைவராக ஆவதற்காகப் போராட்டம் நடத்துகிறார்; இன்னொருவர் தன் மீதுள்ளகுற்றச்சாட்டுகளைமறைத்துக்கொள்வதற்காகப் போராட்டம் நடத்துகிறார் என்று குதர்க்க உரை ஆற்றுவதையும் வானொலி நிலையத்தினர் எவ்வாறு அனுமதித்தனர்? அனுமதித்ததில் அடங்கியுள்ள மர்மம் என்ன?

பஸ் முதலாளிகளிடம் கட்சி நிதி என்ற பெயரால் பல லட்ச ரூபாய் லஞ்சத்தைக் கட்டாய வசூலாகப் பெற்றிருக்கிறார்களே; அதைப்பற்றி வானொலியில் பேசிட எதிர்க்கட்சிகளுக்கு உரிமை அளிக்கப்படுமா?

வட்டிக் கடைக்காரர்களுக்குப்பாதகம் நேராமல் பார்த்துக் கொள்வதாக வாக்களித்து சுமார் பத்து லட்ச ரூபாயை முதல் தவணையாக லஞ்சம் பெற்றிருக்கிறார்களே? அது குறித்து வானொலியில் விளக்க எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?

வேலை நிறுத்தம் பற்றிக்கண்டித்துப்பேச முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட உரிமை — வேலை நிறுத்த அவசியம் பற்றிப் பேச எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படாத காரணம் என்ன? வானொலி. டெலிவிஷனில் இருதரப்புக் கருத்துக்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படும் என்றுஜனதா அரசு அறிவித்த கொள்கை என்ன ஆயிற்று?

அவதூறுகளையும். பொய்களையும், அறைகூவல்களையும். தனது வானொலி உரையாக முதலமைச்சர் இராமச்சந்திரன் தயாரித்திருப்பதை வானொலி நிலையத்தினர் அறிந்து கொள்ளவில்லையா? அல்லது அவற்றை அறிந்து கொள்ள முடியாத அப்பாவிகளா?

சென்னையில் தொழிலாளர்கள் நடத்திய வேலைநிறுத்தத்தினால்தான் டிராம் வண்டிக்கம்பெனியை மூட நேரிட்டு முப்பத்தாறாயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்தனர் என்று எம். ஜி. ஆர். வானொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் உண்மை என்ன? இதோ இந்தியக்கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் அதை விளக்குகிறார்.

"டிராம் வண்டிக் கம்பெனி ஒரு வெள்ளைக்காரனுடையது; பழசாகி விட்ட வண்டிகளைப் புதுப்பிக்கவும், புதிய தண்டவாளங்களைப் போடவும் பணம் இல்லை என்றும்–டிராம் வண்டித் தொழில் லாபகரமாக இல்லை என்றும்—1952–ல் அவன் அதை மூடிவிட்டான். அதனால் வேலையிழந்த

கலைஞர் கடிதம்

சுமார் மூவாயிரம் தொழிலாளர்கள் மோகன் குமாரமங்கலம் தலைமையில் தங்களுக்கு நஷ்ட ஈடு கேட்டுப் போராடினார்கள்; இந்த வரலாற்றையும் தொழிலாளர்கள் எண்ணிக்கையையும் அப்படியே மாற்றி நமது முதலமைச்சர் வானொலியில் பேசியிருக்கிறார்"

முதல்வருக்கு, திரு கல்யாணசுந்தரம் அவர்கள் பொதுக் கூட்டத்தில் அளித்த இந்தப் பதிலை, வானொலி வெளியிட்டிருக்க வேண்டாமா? நேர்மையும், நியாயத்தின்பாற்பட்ட சமநிலைக் கொள்கையும் வானொலிக்கு இருந்தால் ஒருதலைப்பட்சமாகச்செய்திகளைத் தந்துகொண்டிருக்குமா?

'கிளர்ச்சி செய்யும் தொழிலாளிகளையும், விவசாயிகளையும் இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன்" என்று பேசிய ஒரு தலைவரிடம் மற்ற கட்சிகள் சேரலாமா? என்று வானொலியில் எம். ஜி, ஆர். முழங்கியிருக்கிறார்! அது என்னைக் குறிப்பிட்டுத்தான் என்று சில ஏடுகள் விளக்கம் தந்துள்ளன.

'கோரிக்கைகள் நீட்டப்பட்டால் கரும்புக் கரம் நீட்டுவேன் —கோரக் கைகள் நீட்டப்பட்டால் இரும்புக் கரம் தான் நீளும்;'

என்று நான் முன்பொருமுறை கூறியதைத் தனக்கு வசதியாக. தலைகீழாகத் திருப்பிக் கொண்டுள்ளார் எம். ஜி. ஆர். வானொலியில் உடன்பிறப்பே! எந்த எம். ஜி. ஆர். தெரியுமா?

"கழக ஆட்சியில் விவசாயிகள் சுடப்பட்ட போது கருணாநிதி மன தைரியமின்றிக் கலங்கினர். நான்தான் சுட்டது சரி என்று பேசினேன்"

என்பதாக அண்மையில் ஈரோட்டில் பேசினரே, அந்த எம். ஜி. ஆர். தான்!

கழக ஆட்சியின்போது கோவையில் விவ

(11-ம் பக்கம் பார்க்க)

புனித ராஜ்யம்..

(முதற்பக்கத் தொடர்ச்சி)

துன்னு பத்திரிகையிலே போட்டிருக்கு —

நொண்டி: அந்தச் சட்டத்திலே மந்திரிங்க அதிகாரிகளையும் பிடிச்சு அவுங்களுக்கு அதிக தண்டனை கொடுக்க இடம் இருக்குமோ?

பொடியன்: இடம் இருக்குன்னு முதல்ல சொல்லுவாங்க! அப்புறம் மதுவிலக்கு சட்டத்திலே மந்திரிகள், அதிகாரிகள் பெயரை எடுத்துட்டது மாதிரி இதிலியும் எடுத்துடுவாங்க!

அண்ணச்சி: ஏய் நொண்டி! பொடியா! நீங்க இந்தச் சட்டத்தைப் பத்திப் பேச பேச என் மனசு என்னமோ பண்ணுது!

பொடி: என்ன பண்ணுது?

அண்ணச்சி: எங்கேயாவது போகணும் போல இருக்கு!...

நொண்டி: சே! இதுவா பிரமாதம் — எனக்குத் தெரிஞ்ச எடமே ஒண்ணு இருக்கு —

அண்ணச்சி:

தெரிஞ்ச எடமா?...
நீ பலே ஆளுடா!
எந்த எடம்டா?

நொண்டி; பாலம்மான்னு ஒருத்தி இருக்கா! அவ வீட்டிலே லட்டு மாதிரி சிட்டு மாதிரியெல்லாம் கிடைக்கும்....

அண்ணச்சி: அப்படியா? சபாஷ்!... நீ இதை என் கிட்ட சொல்லவே இல்லியே!

நொண்டி: கேட்டாதானே சொல்லப்படும் — வாங்க போகலாம்! பணம் இருக்குல்லே?

அண்ணச்சி: பணத்துக்கு என்னடா பஞ்சம்? தாராளமா இருக்கு –

நொண்டி: டேய்! பொடியா! ஒரு டேக்சி கொண்டா! ஓடியா ஓடியா!

(காட்சி முடிகிறது)

(தொடரும்)

பிரதிநிதி
கே. எம். ஜி. மாதவன்
11, புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை—4.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (156சூரியநாராயணசெட்டிதெரு. இராயபுரம். 6.00013) அச்சிட்டுவெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009